பக்கங்கள் எட்டு
விலை ரூபா 5-00

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 புரட்டாதி 25 வியாழக்கிழமை (11-10 2001) தொலைபேசி 3378 ஒலி 304

அதி நவீன மோஸ்தர்களில்
தரம் குன்றா
தங்க நகைகளுக்கு
அர்ச்சனா
ஜுவலர்ஸ்
118, கஸ்தூரியார் வீதி
176/1, நாவலர் வீதி
யாழ்ப்பாணம்;

## ஜனாதிபதியின் விசேட அதிகாரத்தின் மூலம்

# 11-வது பாராளுமன்றம் நேற்று நள்ளிரவு கலைக்கப்பட்டது!

## பொதுத் தேர்தல் டிசம்பர் 5ந் திகதி

### புதிய பாராளுமன்றம் ஜனவரி 1ல் கூடும்

(அரசியல் நிருபர்)



சுதந்திர இலங்கையின் பதினோராவது பாராளுமன்றம் நேற்று நள்ளிரவு ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்காவினால்கலைக்கப்பட்டது.

பாராளுமன்றம் கலைக்கப்படுவது தொடர்பான விசேட வர்த்தமானி அறிவித்தலை ஜனாதிபதி நேற்று நள்ளிரவு வெளியிட்டார்.

பன்னிரண்டாவதுபாராளுமன்றத்திற்கான வேட்புமனுக்கள் இம்மாதம் 20ம்திகதி சனிக்கிழமை முதல் 27ம் திகதி சனிக்கிழமை வரை தாக்கல் செய்யப்படும் என்றும் டிசம்பர் மாதம் 5ம் திகதி புதன்கிழமை தேர்தல் நடைபெற்று 2002ம் ஆண்டு ஜனவரி மாதம் 1ந்திகதி செவ்வாய்க்கிழமை புதிய பாராளுமன்றம் கூடும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பொதுஜன ஐக்கியமுன்னணி அரசில் இருந்து எதிரணிக்கு மாறுவதற்கு அமைச்சர்களும் எம்பிக்களும் தயாராக இருக்கிறார்கள் என்ற செய்திகள் உண்மைஎன்பதை நிருபிக்கும்வகையில் முன்னாள்அமைச்சர்கள் நால்வர் உட்பட எட்டு பாராளுமன்ற உறுப்பினர்க்கள் எதிகுணி மாறியதை அடுத்து ஜனாதிபதிமாளிகையில் நேற்றிரவு முக்கிய கூட்டம் ஒன்றை ஜனாதிபதி சந்திரிகா

(8 ஆம் பக்கம் பார்க்க)

## வீதிஒழுங்குப்பணியில் ஈடுபட்டிருந்த

# இளைஞர் நேற்று சுட்டுக்கொலை

### யாழ். கஸ்தூரியார் வீதியில் சம்பவம்

## ஆட்சியை கலைப்பதைதவிர அரசுக்கு வேறுவழியில்லை

### ஜோசப்பரராஜசிங்கம் எம். பி

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் பொது ஜன ஐக்கிய முன்னணி அரசு தவறியமையும் நோர்வேயின் சமாதான முயற்சிகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தையை முறித்துக் கொண்டமைக்கு அரசுக்கு இது நல்ல பாடமாக அமைந்துள்ளது என்று தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப பரராஜசிங்கம்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை-வெல்லேரிக்குளம் விமானப்படை முகாம்மீது புலிகள் அதிரடித்தாக்குதல்

### 4படையினர்பலி; ஆயுதங்கள் மீட்பு

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள வெல்வேரிக்குளம். விமானப்படை முகாம் கடந்த செவ்வாய்க்கிழமை நள்ளிரவு விடுதலைப் புலிகளின்அதிரடித்தாக்குதலினால் முற்றாக நிர்மூலமாக்கப்பட்டுள்ளது.

செவ்வாய்க்கிழமை நள்ளி

(8ஆம் பக்கம் பார்க்க)

## நிராயுத பாணிகள் மீது மீண்டும் குறிவைப்பு!

### ஜெகன் எம். பி. கண்டனம்

(யாழ்ப்பாணம்)

நேற்றுக்காலை நயவஞ்சகமாக சுட்டுக் கொல்லப்பட்ட விமலேஸ்வரன் எனும் வீதிப் போக்குவரத்து கண்காணிப்புப் பிரிவுத் தொண்டனின் நாயகக் கட்சியின் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் பிரதம அமைப்பாளருமான கே. வி. குகேந்திரன் (ஜெகன்)வன்மையாகக் கண்டித்துள்ளார்.

போக்குவரத்து கண்காணிப் புப் பிரிவுத் தொண்டனின் கொலையை ஈழ மக்கள் ஜன (ஜகன்)வன்மையாகக் கண் டித்துள்ளார்.

(8ஆம் பக்கம் பார்க்க)

# யாழ். கஸ்தூரியார் வீதியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)
வீதிப்போக்குவரத்துப்பாது காப்புட்பிரிவைச் சேர்ந்த ஒருவர் நேற்றய தினம் கஸ்தூ ரியார் வீதியும் நாவலர் வீதி யும் சந்திக்கும் பகுதியில் பணி யில் ஈடுபட்டிருந்த வேளை இனம் தெரியாதவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டுள் ளார்.
கிளிநொச்சி உதயநகர்

(8ஆம் பக்கம் பார்க்க)

# வீதிப்போக்குவரத்துப் பிரிவினர் தமது நிலையைவிளக்கி அறிக்கை

(யாழ்ப்பாணம்)
நேற்றைய தினம் வீதிப் போக்குவரத்து பாதுகாப்புப் பிரிவைச்சேர்ந்த ஒருவர்இனந் தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டது குறித்து வீதிப்போக்குவரத்து பாது காப்புப் பிரிவினர் விடுத்த கண்டன அறிக்கை இங்கு அப்படியே தரப்படுகிறது.
10 10 2001 அன்று காலை 8 மணியளவில் வீதி போக்கு வரத்துப் பாதுகாப்பு பிரிவில் கடமையாற்றிய ஸ்ரீஸ்கந்த

(8ஆம் பக்கம் பார்க்க)

# ஆளும் கட்சியின் எட்டு உறுப்பினர் நேற்று எதிரணியில் அமர்ந்தனர்

(கொழும்பு)
ஆளும் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசில் இருந்து நான்கு முன்னாள் அமைச்சர் கள் எஸ். பி. திஸநாயக்கா, பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் மகிந்த விஜயசேகரா, விஜய பால மெண்டிஷ் ஆகியோ உட்பட எட்டுப்பாராளுமன்ற உறுப்பினர்கள் எதிரணிக்கு நேற்றுமாறியுள்ளனர்.
பாராளு மன்றம் நேற்றுக் கூடியபோதே இவர்கள் எதி ரணிவரிசையில் அமர்ந்திருந் தனர்.
முன்னாள் அமைச்சர்கள் நான்கு பேருடன் பாராளு மன்ற உறுப்பினர்களான எதிர் வீரபிரேமரத்தின, ஆனந்த முனசிங்க, பந்துல குணவர்த்தன, ஜயசுந்தர விஜயக்கோன் ஆகியோரும் எதிரணியில்சென்று அமர்ந்த வர்களாவர். (வ-5)

# ஆறுமுகம் தொண்டமான் அமைச்சர் பதவியை இராஜிநாமாச் செய்தார்!

(கொழும்பு)
தோட்டஉட்கட்டு மற்றும் கால்நடை அபிவிருத்திஅமைச் சரும் இலங்கைத் தொழிலா ளர் காங்கிரஸ்தலைவருமான ஆறுமுகம் தொண்டமான் தனது அமைச்சர் பதவியை நேற்று இராஜிநாமாச் செய் தார்.
தனது இராஜிநாமாக் கடி தத்தை ஜனாதிபதிக்குநேற்று பிற்பகல் அனுப்பி யுள்ளதாக அவர் விடுத்த அறிக்கை யொன்றில் தெரிவித்துள்ளார்.
அவ்வறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது நாட் டின் தற்போதைய அரசியல் நிலையைக் கருத்திற்கொண் டே இராஜிநாமாச் செய்துள்

[8ம் பக்கம் பார்க்க]

# பகிஷ்கரிப்புக்கு ஆதரவு வழங்குமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)
வீதிப்போக்குவரத்து பாது காப்புப் பிரிவில்பணியாற்றிய ஸ்ரீஸ்கந்தராஜா விமலேஸ் வரன் நேற்றுக்காலை சுட்டுக் கொல்லப்பட்டதைக் கண்டித் தும், அதற்கு துக்கம் அனுஷ் டிக்கும் வகையிலும் இன்று இடம்பெறவுள்ள பகிஷ்கரிப் புப்போராட்டத்திற்கு யாழ் குடாநாட்டு மக்கள் ஒத்து ழைப்பு வழங்கவேண்டும்
இவ்வாறு யாழ் மாவட்ட வீதிப்போக்குவரத்து பாது காப்பு பிரிவினர் குடாநாட்டு

(8ஆம் பக்கம் பார்க்க)

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

# கண்ணீரால் சொரிகிறது குருதி

## ஸ்ரீஸ்கந்தராசா விமலேஸ்வரன்

கடமையில் ஈடுபட்டிருந்த வேளையில் அகாலமாய்
அநியாயமாய் உயிர்பிரிந்த நண்பனே
சேவை நோக்குடன் தொண்டில் ஈடுபட்டுநின்றாய்
தேவையை உணர்ந்து சேவையை புரிந்தாய்,
நீர்சிந்திய குருதி
இந்த மண்ணில் வாழும் மக்களின் விழிகளை
திறக்கச்செய்யும்.

தலைவர், செயலாளர், ஊழியர்கள்.

நீர்வேலி. (கி 2710) வலி கிழக்குபிரதேச சபை.

# கண்ணீர் அஞ்சலி

## ஸ்ரீஸ்கந்தராசா விமலேஸ்வரன்

**உதிரம் சொரியும் விழிகளுடன்
ஆருயிர் நண்பன் ஸ்ரீஸ்கந்தராசா விமலேஸ்வரன்
உதிரம்சொரிகிறதுவிழிகள்எதிரியாகஉன்னைக்கருதியவர்கள் யாரென்று
ஏங்குகிறது நெஞ்சம்
உன்னைக்கொடூரமாகக்கொலைசெய்தவர்களின் கோளைத்தனம்கண்டு
கொதிக்கிறது தேகம்
நண்பனே!**

உன்னை இழந்தது சோகம் உன்சேவையை எண்ணி துடிக்கிறது இதயம்
நண்பா நீ செய்தது என்ன?
வீதியில் வாகனப் போக்குவரத்துக்களை ஒழுங்குபடுத்தும் கடமைப் பொறுப்பை ஏற்றாய்
விபத்துக்களைத் தடுத்து மக்களைக் காக்கும் பணியில் ஈடுபட்டாய்
நெரிசல் மிகுந்த வாகனப் போக்குவரத்து குடாநாட்டு வீதிகளில் இல்லை
ஆனாலும் தன்னிச்சையாக சவாரி செய்யும் சயிக்கிள் வேகமாகப் பறக்கும் படையினர்
வாகனங்கள். போக்குவரத்து பொலிஸார் இல்லாத கண்காணிப்பார் அற்ற வீதிகள் வீதிகளின்
ஒழுங்குகளை மீறும் தாறுமாறான சம்பவங்கள் இவை எல்லாம் வீதி விபத்துக்களை அடிக்கடி
தோற்றுவித்துக் கொண்டிருந்தன

இத்தகைய வீதிவிபத்துகளைக் கண்டு அழுது புலம்பிக்கொண்டிருக்காமல் இவற்றைத் தடுக்கவும் தவிர்க்கவும் வேண்டியதாக இருந்தது. இந்த நிலையில் தான் வீதிப் போக்குவரத்துக்களைக் கண்காணிக்கும் தொண்டர்களின் சேவை உணரப்பட்டது.

வாகனப் போக்குவரத்துக்களை ஒழுங்குபடுத்தி மனித உயிர்கள் அகால வேளையில் பலிகொள்ளப் படுவதைத் தடுக்கும் சேவையில் தொண்டர்கள் ஈடுபடுத்தப்பட்டனர்

நிராயுதபாணிகளாக எவரையும் எதிரிகளாக நோக்காமல் தொண்டு செய்து நின்ற இவன் கொலையுண்டது நியாயமானது தானா?

ஸ்ரீஸ்கந்தராசா விமலேஸ்வரன் என்னும் போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவுத்தொண்டன் நேற்று காலையில் யாழ். நாவலர் வீதியில் வைத்து சுட்டுக்கொல்லப் பட்டிருக்கிறான். இளம் வயதிலேயே குடும்பப் பொறுப்பை ஏற்கவேண்டிய தேவை இவனிற்கேற்பட்டது. தந்தையை இழந்து விட்டிருந்த இவனிற்கு உடன்பிறப்புகள் ஆறுபேர். குடும்பத்தின் வறுமையைப் போககி பசியில் வாடவிடாது பார்க்கும் மார்க்கத்தில் போக்குவரத்துப் பிரிவில் தன்னை இணைத்துக் கொண்டு பணிபுரிந்தான். சமூகத்தின் மேம்பாட்டிற்காகவும் குடும்பத்தின் வறுமையைப் போக்கவும் பாடுபட்ட இவன் எவருக்கென்ன துரோகம் இளைத்திருந்தான். தவறுசெய்தவர்களுக்குக் கூட விசாரணைகளும் நீதிமன்றங்களும் சட்டப் பாதுகாப்பை வழங்கவேண்டும் என்றும் வலியுறுத்தும் மனித உரிமை வாதிகள் மலிந்த இத்தேசத்தில் தவறே செய்யாத இவனிற்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டது ஏன்? தட்டிக் கேட்காமல் தொடர்ந்தும் தலை குனிந்து மௌனம் காத்து நிற்பது தர்மமாகுமா? நிராயுதபாணிகளைக் குறிவைத்து கொலைசெய்வதுதான் வீரம் செறிந்த போராட்டத்தின் விளைவு.

அன்பார்ந்த தமிழ்பேசும் மக்களே!
குடும்ப உறுப்பினர்களின் பசியை விரட்ட பாடுபட்ட இந்த இளைஞன் கொலையுண்டது எந்தவகையிலும் நியாயமானது அல்ல என்பதை எடுத்துணர்த்தும் வகையில் உங்கள் குரலை ஓங்கி ஒலியுங்கள்.

**ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி**
யாழ். மாவட்டம்

(கி-2711)

## சிறு விளம்பரம்

### திருமண சேவை

எம்மிடத்தில் பட்டதாரிகள், டாக்டர்கள், இஞ்சினியர்கள், வெளிநாட்டு பிரஜா உரிமை பெற்ற மணமக்கள் உள்ளனர். தொடர்பு 772, பருத்தித்துறை வீதி, நல்லூர். (அம்பாள் சைவ உணவகம், மேல்மாடி)

(3828)

### தேவை

திருமண சேவை ஒன்றிற்கு உதவியாளர் தேவை. 25 - 32 வயது எல்லைக்குள் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. நேரில் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி கமலக்கண்ணன் திருமணசேவை, 772, பருத்தித்துறை வீதி, நல்லூர். [அம்பாள் சைவ உணவகம், மேல்மாடி] (சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்)

(3829)

## நிம்மதி வேண்டி விசேட பூஜை

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை மக்கள் மீளக்குடியமர்ந்து நிம்மதியாக வாழ வ்ழி பிறக்க வேண்டி புரட்டாதி இறுதிச் சனியன்று கொழும்புத்துறை மேற்கு வதரிபீட விநாயகர் ஆலயத்தில் நவக்கிரக ஹோமம், விசேட பூஜை வழிபாடுகள் என்பன காலை 9.00 மணி முதல் இடம்பெறவுள்ளன. (உ-223)

## கள்வர் அட்டகாசம்

(துன்னாலை)

நேற்று முன்தினம் இரவு யா/கரவெட்டி மாணிக்க வித்தியாலய அலுவலகத்தினுள் நுழைந்ததிருடர் கூட்டம், அங்கிருந்த ஆவணங்களை அள்ளி எறிந்துவிட்டு, அலுவலக அறையை அசுத்தப்படுத்திவிட்டும் சென்றுள்ளதாகப் பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (உ-41)

## 15 ஆயிரம் ரூபா தண்டப் பணம்

[மந்திகை]

சட்டவிரோதமாக மதுபானம் உற்பத்தி செய்து விற்பனையில் ஈடுபட்ட நபரை தண்டப்பணமாக 15 ஆயிரம் ரூபா செலுத்துமாறுபருத்தித்துறை நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டார்.

பருத்தித்துறை 2ம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த கே. வேலும்மயிலும் என்பவருக்கே நீதிபதி மேற்கண்டவாறு உத்தரவிட்டார். உ-23

## காணி கொள்வனவு

(நவாலி)

வலி. தென்மேற்கு- மானிப்பாய்ப் பிரதேச சபையின் உப அலுவலகம் அமைக்க பெரியவிளானில் 3 லட்சத்து 40ஆயிரம் செலவில் 10பரப்புக்காணி கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி இடத்தில் 50லட்சம் ரூபா செலவில் புதியகட்டடம் அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. (உ-228)

## கட்டாயக் கல்வி கருத்தரங்கு

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை பிரதேச செயலக அபிவிருத்தித் தொண்டர்களினால் நடத்தப்பட்ட கட்டாயக் கல்விக் கருத்தரங்கு நிகழ்ச்சி நேற்று ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி மண்டபத்தில்இடம் பெற்றது.

அபிவிருத்தித் தொண்டர்களின் தலைவர் த. சூரியகுமார் தலைமையில் இடம்பெற்ற கட்டாயக்கல்விக்கருத்தரங்கிற்கு ஊர்காவற்றுறைப் பிரதேச சபைத் தலைவர் என். மதனராஜா பிரதம விருந்தினராகவும், நெடுந்தீவுப் பிரதேச சபைத் தலைவர் புலவர். டபிள்யூ அரியநாயகம் சிறப்பு விருந்தினராகவும் ஊர்காவற்றுறைக் கோட்டக் கல்வி அதிகாரி கே. இரத்தினசிங்கம்கௌரவ விருந்தினராகவும் கலந்து கொண்டனர். (உ-75)

## கசிப்பு கடத்தியோர் மாட்டிக் கொண்டனர்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய்ப்பகுதியில்கசிப்பு விநியோகத்தில் ஈடுபட்டஇருவர் அப் பகுதி விழிப்புக் குழு இளைஞர்களால் மடக்கிபிடிக்கப்பட்டனர்.

நேற்றுஅதிகாலை3.00மணியளவில்இராசவீதிசந்திப்பகுதியில்மேற்படிஇருசந்தேகநபர்களும்சைக்கிளில் சுமார் 100 போத்தல் கசிப்புடன் வந்த சமயம் விழிப்புக் குழு இளைஞர்கள் இவர்களை மடக்கி பிடித்துள்ளனர்.

பகுதி கிராம சேவகரின் உதவியுடன், கசிப்புபோத்தல்கள் கழுத்தில் தொங்கவிடப்பட்டு ஊர்வலமாக அழைத்துச் செலப்பட்டு கோப்பாய் பகுதி பொலிஸாரிடம் மேற்படி இருவரும்ஒப்படைக்கப்பட்டனர்.

இதேவேளை, மேற்படி பகுதி விழிப்புக் குழுவினர் தமது பொறுப்புணர்ந்து செயற்பட்டு திருடர்கள் பலரை மடக்கிப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்டைத்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (உ-9)

## கேள்வி அறிவித்தல்

### சமைக்காத உணவுப் பொருட்கள் வழங்குதல்- 2002

### அரசினர் பொது வைத்தியசாலை, யாழ்ப்பாணம்

2001.10. 8 ஆம்திகதியிடப்பட்டு 2001.10.9 ஆம் திகதி வெளியிடப்பட்ட மேற்படி விளம்பரத்தின 2 ஆம் பந்தியில் 2001.10.21 ஆம் திகதி பி ப 2. 00 மணி எனக் குறிப்பிடப்பட்டுள்ள முடிவு திகதி 2001.10.22 பி.ப 2.00 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

வைத்திய கலாநிதி(செல்வி)
நவமலர் கனகரத்தினம்
பணிப்பாளர்.

10.10.2001 (சி/2707)

## யாழ்ப்பாணம்- மாநகரசபை

### சந்தைகள், இறைச்சிக்கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான

# கேள்வி அறிவித்தல் - 2002

இதன் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள சந்தைகள், இறைச்சிக் கடைகள் மற்றும் துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையங்கள் ஆகியவற்றை 01. 01. 2002 முதல் 31.12.2002 வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ்ப்பாண மாநகர ஆணையாளராகிய என்னால் 26. 10.2001 ந்திகதி வெள்ளிக்கிழமை பி.ப 2.00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும்.

கேள்விகள் குறித்த அட்டவணையில் குறிப்பிட்டுள்ளகேள்விப்பிணைப் பணமும், கேள்விப்படிவக் கட்டணம் ரூபா 250/- உடன் பண்டங்கள் சேவைகள் வரி ரூபா 31. 25 யும் சேர்த்து செலுத்துவதன் பேரில் 25.10.2001 ந்திகதி வியாழக்கிழமை பி.ப.3. 00 மணி வரையும் யாழ்.மாநகரசபையால் வழங்கப்படும் உத்தியோக பூர்வமான படிவங்களின் இணைப்பிரதிகளில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப்படிவங்களை யாழ்ப்பாண மாநகரசபையில் இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். அல்லது ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம் என்ற முகவரியிட்டு அரக்கு முத்திரையிடப்பட்ட உறையிலிட்டு 26.10.2001ந்திகதி வெள்ளிக்கிழமை பி ப 2 00 மணிக்குப் பிந்தாமல் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். கடிதஉறையின் இடது பக்க மேல் மூலையில் '- - - - - -' கேள்விக்கான விண்ணப்பம் என எழுதப்படல் வேண்டும். தபாலில் அனுப்பப்படும்போது ஏற்படும் தாமதங்களுக்கு மாநகரசபை பொறுப்பேற்க மாட்டாது.

கேள்விகள் 26 10 2001 ந்திகதி வெள்ளிக்கிழமை பி.ப 2 30 மணிக்கு கேள்விச் சபையினால் திறந்து பரிசீலிக்கப்படும் அத்தருணம் கேள்விக்காரர் அல்லது அவரது பிரதிநிதி எவரேனும் சமுகமளிக்க முடியும். மேலதிக விபரங்களுக்கு அலுவலகநேரங்களில் அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

## அட்டவணை

| 1. சந்தைகள்:- (துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்பு உட்பட) | மீளளிக்கக்கூடிய கேள்விப்பிணைப் பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த கேள்வித்தொகை [ஜி.எஸ்.ரி நீங்கலாக] |
|---|---|---|
| 1. பெரியகடை மரக்கறிச்சந்தை | 5000.00 | 325000.00 |
| 2. கொட்டடி மீன்சந்தை (கொட்டடி/பண்ணை) | 5000.00 | 2210000.00 |
| 3 குருநகர் சந்தை | 5000.00 | 480800.00 |
| 4 செங்குந்தா சந்தை | 5000.00 | 387400 00 |
| 5. நாவாந்துறை சந்தை | 2500.00 | 60000.00 |
| 6. அரியாலை சந்தை | 3000.00 | 126000.00 |
| 7. பாஷையூர்ச்சந்தை | 2500.00 | 36100.00 |
| 8. கொழும்புத்துறை சந்தை | 1000.00 | 2200.00 |

| 2. துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்பு நிலையம் | மீளளிக்கக் கூடிய கேள்விப் பிணைப் பணம் | ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆககுறைந்த கேள்வித் தொகை (ஜி.எஸ்.ரி. நீங்கலாக) |
|---|---|---|
| 1. கஸ்தூரியார் வீதி துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையம் | 2500.00 | 18200.00 |

| 3. இறைச்சிக்கடைகள் | இல. | மீளளிக்கக்கூடிய கேள்விப் பிணைப் பணம் | நிர்ணயிக்கப்பட்ட ஆககுறைந்த கேள்வித் தொகை ஜி.எஸ்.ரி.நீங்கலாக | ஜி.எஸ்.ரி. நீங்கலான மாத வாடகை |
|---|---|---|---|---|
| 1. கொட்டடி ஆட்டிறைச்சிக் கடை | 01 | 2500.00 | 23200.00 | 123.75 |
| 2. ,, ,, | 02 | 2500 00 | 25600.00 | 112.50 |
| 3. ,, ,, | 03 | 2500 00 | 30200.00 | 112 50 |
| 4. ,, ,, | 04 | 2500.00 | 21100.00 | 112.50 |
| 5. ,, ,, | 05 | 2500.00 | 20400.00 | 112.50 |
| 6. ,, ,, | 06 | 2500 00 | 19700.00 | 112.50 |
| 7. ,, ,, | 07 | 2500.00 | 27200.00 | 112.50 |
| 8. ,, ,, | 08 | 2500.00 | 19200.00 | 112.50 |
| 9. குருநகர் மாட்டிறைச்சிக் கடை | 01 | 2500.00 | 76600.00 | 195.00 |
| 10. ,, ,, | 02 | 2500.00 | 62200 00 | 195.00 |
| 11. ,, ,, | 03 | 2500.00 | 62200 00 | 195.00 |
| 12. ,, ,, | 04 | 2500.00 | 41500 00 | 195.00 |
| 13. ,, ,, | 05 | 2500.00 | 47700.00 | 195 00 |
| 14. ,, ,, | 06 | 2500.00 | 44000.00 | 195.00 |
| 15. ,, ஆட்டிறைசிக்கடை | 07 | 2500.00 | 8000.00 | 195.00 |
| 16. நரிக்குன்று மாட்டிறைச்சிக் கடை | 01 | 5000.00 | 90000.00 | 135.00 |
| 17. செங்குந்தாஆட்டிறைச்சிக் கடை | 01 | 2500.00 | 32500 00 | 112 50 |
| 18. ,, ,, | 02 | 2500.00 | 25500.00 | 112.50 |
| 19. பாஷையூர் மாட்டிறைச்சிக் கடை | 01 | 2500.00 | 48500.00 | 135.00 |
| 20. ,, ,, | 02 | 2500.00 | 35500.00 | 135.00 |
| 21. அரியாலை ஆட்டிறைச்சிக் கடை | 01 | 2500 00 | 17100.00 | 135.00 |
| 22. ,, மாட்டிறைச்சிக் கடை | 02 | 2500.00 | 36400.00 | 135.00 |
| 23. நாவாந்துறை ,, | 01 | 2500.00 | 25100.00 | 200.00 |
| 24. ,, ,, | 02 | 2500.00 | 9600.00 | 200.00 |
| 25. ,, ,, | 03 | 2500.00 | 15100.00 | 200.00 |

(6ம் பக்கம் பார்க்க)

## இராசி பலன்

11-10-2001
புரட்டாதி 25 வியாழன்
நவமி பி. ப 3.26 வரை
பூசம் மு. இ 11.33 வரை
இராகுகாலம் 1.32-3.02
சுபநேரம் 7.32-9.02
அமிர்தசித்தம்

**மேடம்**
மனச்சஞ்சலம், முயற்சி தாமதம், பெரியோர் மதிப்பு, சிறுவியாதி.

**இடபம்**
நல்லமுயற்சி, வாக்கு மேன்மை, தனவரவு, பிரயாணநன்மை.

**மிதுனம்**
காரிய தாமதம், விதண்டா வாதம், மதிப்புக்குறைவு, தனவிரயம்.

**கடகம்**
போசனசுகம், அதிகாரம், முயற்சி கைகூடும், செல்வாக்கு.

**சிங்கம்**
நித்திரைக்குறைவு, தனவிரயம், பிரயாணம், திடீர் நன்மை.

**கன்னி**
குடும்பசுகம், பெருமையான சம்பவம், நண்பர்கள் உதவி, பொருள்சேர்க்கை.

**துலாம்**
உற்சாகம், தொழில் நன்மை, தூரதேசசெய்தி, பிறர் உதவி.

**விருச்சிகம்**
உடல்சோர்வு, எதிர்பாராத நன்மை, முயற்சிதாமதம், மனச்சஞ்சலம்.

**தனுசு**
எதிர்பாராத அச்சம், நண்பர்கள் வெறுப்பு, காரியதடங்கல், வியாதி.

**மகரம்**
பிரயாணம், கௌரவம், நண்பர்கள் சந்திப்பு, காரிய நன்மை.

**கும்பம்**
மனமகிழ்ச்சி, ஆரோக்கியம், முயற்சி கைகூடும், தொழில் நன்மை.

**மீனம்**
வியாபார நன்மை, புத்திரரால் கவலை, மனப்பதட்டம், காரியதாமதம்.

(பழைய நேரப்படிகணிப்பிடப்பட்டது.)

வளவன்

## விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

(கொழும்புத்துறை)

சைவ பரிபாலன சபையினரால் நடத்தப்படும் சைவ சித்தாந்த பிரவேசபண்டிதர், பாலபண்டிதர், சித்தாந்த பண்டிர்த ஆகிய பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

இப் பரீட்சைகளுக்குத் தோற்ற விரும்புவோர் இம்மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னதாக 125, அரசடி வீதி, கந்தர் மடம் என்னும் முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு தேர்வுச் செயலாளர் வ. கந்தசாமி தெரிவித்துள்ளார். (செ-223)

## நிர்வாகசபை தெரிவு

(ஊர்காவற்றுறை)

சுருவில் விவசாயிகள் சம்மேளனப் பொதுக்கூட்டம், காலபோகக்கூட்டம் என்பன அண்மையில் இடம்பெற்றன.

புதிய நிர்வாகசபைத் தெரிவின் போது தலைவராக வே. ஞானசம்பந்தன், உப தலைவராக க.தெய்வேந்திரன், செயலாளராக க. நடராஜா, உப செயலாளராக சு. பாதுஜன் பொருளாளராக சு. சர்வானந்தன் ஆகியோ[illegible] நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டார்கள். (உ-75)

## சைவபரிபாலனசபையின்
# சைவநெறித் தேர்வு நவம்பரில்
# 63,137 பேர் தோற்றவுள்ளனர்

(கொழும்புத்துறை)

சைவ பரிபாலன சபையினரால் ஆண்டுதோறும்நடத்தப்பட்டு வரும் சைவநெறித் தேர்வு இவ்வருடம் நவம்பர் மாதம் 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறுமென அதன் தேர்வுச் செயலாளர் வ. கந்தசாமி தெரிவித்தார்.

இப்பரீட்சைக்கு இவ்வாண்டு, யாழ்ப்பாணம், வவுனியா மன்னார், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களிலிருந்து மொத்தமாக 63 ஆயிரத்து 137 மாணவர்கள் தோற்றவுள்ளனர்.

யாழ்ப்பாணமாவட்டத்தில் 360 பரீட்சை நிலையங்களிலும், ஏனைய மாவட்டங்களில்மொத்தம்30நிலையங்களிலும் இப்பரீட்சை நடைபெறுமெனவும், இதற்கான ஏற்பாடுகள் யாவும்பூர்த்தியடையும் நிலையில் உள்ளதெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

வழமைபோல் தரம் பன்னிரண்டு மாணவர்களிற்குஇந்து நாகரிகம், இந்துசமயப் பரீட்சை நடைபெறுமெனவும் தெரிவித்தார். (உ-223)

## கட்டாக்காலிகளை பிடிக்க நடவடிக்கை

(நவாலி)

நவாலிப் பகுதியில்கட்டாக்காலி மாடுகளைப் பிடிக்கவிவசாய சம்மேளன செயலாளரினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மாடுகள் பிடிக்கப்படும் சந்தர்ப்பத்தில் கடும் தண்டப் பணம் அறவிடப்படும் எனவுப் நவாலி விவசாயிகள் சம்மேளனம் தெரிவித்துள்ளது. [உ228

## பண்பாட்டு அம்சங்கள் வடமராட்சியில் திரட்டல்

(துன்னாலை)

பருத்தித்துறை பிரதேச செயலக கலாசாரப் பேரவையால், இப்பிரதேச எல்லைக்கு உட்பட்ட வல்வெட்டித்துறை, புலோலி, தொண்டைமானாறு கலாசாரக் கொத்தணிகளில் தமிழர் பாரம்பரிய கலாசாரப் பண்பாடுகள், பழமைவாய்ந்த பண்பாட்டு அம்சங்களை பெறுவது சம்பந்தமான கலந்துரையாடல் அண்மையில் நடத்தப்பட்டது.

இதனையடுத்து தற்போது இக் கலாசார அம்சங்கள் தொடர்பான தகவல்களை திரட்டுவதில் முனைப்புடன் செயற்பட்டு வருவதாக பருத்தித்துறை பிரதேச செயலர் ஆ. சிவசுவாமி தெரிவித்தார். (உ-41)

## தரம் -5 புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகள் சில

அண்மையில் வெளியான தரம் -5 புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகள் சில வருமாறு.

**யா.கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம்.**
கிருபசோதரன்

**யா.ஏழாலை சைவ மகாஜன வித்தியாலயம்**
கு நிரோசினி, க [illegible]கனக துர்க்கா.

**யா. ஏழாலை தெற்கு அ.மி.த.க. பாடசாலை**
வே. அன்ரன் டினேஸ், க அபிராமி சி. ஹேமதர்சினி

**யா.ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம்**
மு.பிரதீஸ். (உ-206)

## கட்டுத்துவக்கில் சிக்கியவர் காயமடைந்தார்

(மந்திகை)

பயிற்றங் கொடிக்கு தடி வெட்டச்சென்ற நபர் ஒருவர் பன்றிக்கு வைக்கப்பட்டிருந்த கட்டுத்துவக்கில் சிக்குண்டு காலில் காயமடைந்த நிலையில் பருத்தித்துறை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த திங்கட்கிழமை மிருசுவில் கெற்பேலி காட்டுப் பகுதியில் இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

கொடிகாமம் சின்னப்பாலாவிலைச் சேர்ந்த வடிவேலு இந்திர குமார் (வயது-23) என்பவரே இவ்வாறு காயமடைந்தவராவார். (செ-23)

## பொதுக்கூட்டம்

[கொழும்புத்துறை]

ஈச்சமோட்டை சனசமூக நிலைய புனரமைப்பு தொடர்பான பொதுக் கூட்டம்எதிர் வரும்14ஆம்திகதி ஞாயிற்றுக் கிழமைபி,ப3.00 மணிக்கு நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இப்பகுதி இளைஞர்களின் அயராத முயற்சியினால் இச் சனசமூக நிலையம். மீண்டும் இயங்க ஆரப்பித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (உ-223)

## வழிகாட்டல் வகுப்பு

(கொழும்புத்துறை)

சைவபரிபாலன சபையினரால் நடத்தப்படவிருக்கும் சைவசித்தாந்த பிரவேச பண்டிதர், பால பண்டிதர், சித்தாந்தபண்டிதர், இளஞ்சைவப் புலவர், சைவப் புலவர் ஆகியபரீட்சைகளுக்கு தோற்ற விண்ணப்பித்தவர்களுக்கானவழிகாட்டல் வகுப்புக்கள்சனி .ஞாயிறுதினங்களில் 9 மணியிலிருந்து12மணி வரைவண்ணைநாவலர் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றுவருவதாக சைவபரிபாலன சபைத்தேர்வுச் செயலாளர்வ. கந்தசாமி தெரிவித்தார்.

இந்த வழிகாட்டல்வகுப்புக்களில் மூத்தசைவப்புலவர்கள் சைவப் பேரறிஞர்கள் விரிவுரைகளை மேற் கொள்வதாகவும் பரீட்சார்த்திகள் வந்து பயன் பெறுமாறும் அவர் மேலும் தெரிவித்தார். (உ223

## விபத்தில் காயம்

(மந்திகை)

பருத்தித்துறை பகுதியில் மோட்டார் சைக்கிள், சைக்கிள் விபத்துக்குள்ளானதால் இருவாகன ஓட்டுனர்களும் காயமடைந்த நிலையில்பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை பருத்தித்துறை முதலாம் கட்டைச் சந்தியில் நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் மோட்டார் சைக்கிளில் வந்த கல்லூரி வீதியை சேர்ந்த பொன்னையா இராமதேவன் சைக்கிலில் வந்த வல்லிபுரக் குறிச்சியைச் சேர்ந்த வி.ரவீந்திரன் ஆகிய இருவருமே காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். [உ-23]


## வேலணை பிரதேச சபை
## வேலைகளுக்கான
# கேள்வி அறிவித்தல்

வேலணை பிரதேச சபைத் தலைவரினால் பின்வரும் வேலைகளுக்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

01. கேள்விப்பத்திரங்கள் நாளை 12-10-2001 ஆம் திகதி நண்பகல் 12-00 மணி வரை நிர்மாண பயிற்சி நிறுவனத்தினால் (இக்ராட்)தரம் 9 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவுசெய்த ஒப்பந்தகாரர்களும், பொதுஸ்தாபனங்களும் கீழ்க்குறிப்பிடும் தொகையைச்செலுத்தி கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
02. கேள்விப்பத்திரங்களை பெற்றுக்கொள்ளுபவர்கள் கணிய அளவீட்டுச் சிட்டை. கொடுப்பனவு அறிக்கை என்பன தயாரிக்கக்கூடியவராக இருத்தல்
03. கேள்விப்பத்திரத்தில் ஒரு பிரதியை கடித உறையிலிட்டு அரக்கு முத்திரை வைத்து 'தலைவர், வேலணை பிரதேச சபை, வேலணை' என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அல்லது தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் இட்டு, இரண்டாம் பிரதியைப் 'பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம்' அவர்களுக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். இரண்டு பிரதிகளையும் உரிய இடங்களில் 17-10-2001 ஆம் திகதி நண்பகல் 12-00 மணிக்கிடையில் அனுப்பிவைத்தல் வேண்டும்.
04. கேள்விகள் 17-10-2001 ஆம் திகதி பிற்பகல் 1-00 மணிக்குத் திறக்கப்படும், அச்சமயம் கேள்வி சமர்ப்பித்தவர் அல்லது அவரது பிரதிநிதி சமுகமளிக்கலாம்.
05. கேள்விகளை ஏற்கவோ, நிராகரிக்கவோ கேள்விச் சபைக்கு உரிமையுண்டு.
06. மேலதிக விபரங்களை வேலணை பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்,

| இல. | வேலை விபரம் | கேள்விப்பத்திரப் பணம் (மீளளிக்கப்படக் கூடியது) | கேள்வி வைப்புப் பணம் (மீளளிக்கப்பட மாட்டாது) | பொருள்கள் சேவைகள் மீதான வரி |
|---|---|---|---|---|
| 1. | பஸ்தரிப்பு நிலையம் புனரமைப்பு (வேலணை, அல்லைப்பிட்டி. (புங்குடுதீவு) | 5,000/- | 500/- | 62.50 |
| 2. | இந்து மயானங்கள் புனரமைப்பு (வேலணை) | 5,000/- | 500/- | 62.50 |
| 3. | செட்டிபுலம் முன்பள்ளி கட்டடம் புனரமைப்பு (வேலணை) | 4,000/- | 400/- | 50.00 |
| 4. | அம்பிகா சனசமூகநிலையம், நயினாதீவு தளபாடம் வழங்கல் | 500/- | 50/- | 6.25 |
| 5. | நயினாதீவு மத்திய சனசமூகநிலையம் முன்பள்ளி சிறுவர் மைதானம் அமைத்தல் - உபகரணம் வழங்கல் | 750/- | 75/- | 9.38 |
| 6. | நயினாதீவு ஸ்ரீபிடாரிஅம்பாள் சனசமூக நிலையம்,முன்பள்ளி அமைத்தல் | 2000/- | 200/- | 25.00 |
| 7. | நயினாதீவு குடிநீர்வழங்கலுக்கான கிணறு சுற்றுமதில் அமைத்தல் | 2000/- | 200/- | 25.00 |
| 8. | ஆரம்ப சுகாதார நிலையம் புனரமைப்பு (வேலணை) | 5000/- | 500/- | 62.50 |
| 9. | கடலரிப்பைத் தடைசெய்ய அணைச் சுவர் அமைத்தல் நயினாதீவு பள்ளிவாசலடி முன்பாக. | 10000/- | 1000/- | 125.00 |

திரு ந. கருணாகரகுருமூர்த்தி (ஜே. பி.யு.எம்)
தலைவர்
வேலணை பிரதேச சபை.

வேலணை பிரதேச சபை,
வேலணை.
08-10-2001

(கி-2708)

## இன்று ஒரு தகவல்

# மன்னரும் கவிஞரும்

போஜராஜா என்று ஓர் அரசர் இருந்தார். அவரின் அரச சபையில் காளிதாசர் என்ற கவிஞர் இருந்தார். என்ன? இதெல்லாம் தெரிந்த பெயர் தானே? ஏதோ புதிதாகச் சொல்கிற மாதிரி ஆரம்பிக்கிறீர்களே என்று நினைக்கிறீர்களா? சின்னப் பிள்ளைகளுக்கு இப்படி ஆரம்பித்தாற் தான் பிடிக்கும். அதனால் தான் அப்படி ஆரம்பித்தேன். வேறு ஒன்றுமில்லை! இப்போது விஷயத்திற்கு வருகிறேன்: போஜராஜா ஒரு நாள் காளிதாசரை கூப்பிட்டார்;

என்மேலே ஒருபாட்டுப்பாடு என்றார். "நீ பாடுகிற பாட்டு, நான் இறந்து போன பிறகு நீஎப்படிப்பாடுவாயோ அப்படி இருக்க வேண்டும்! அது மாதிரிப் பாடு" என்றும் கேட்டுக் கொண்டார்;

"போஜராஜனே! அது மாதிரி நான் இரங்கற்பாபாடினால் நீ நிஜமாகவே இறந்து போய் விடுவாய்! ஏனென்றால், என் நாக்கில் சரஸ்வதி இருக்கிறதனால் சொன்னால் பலித்து விடும். அதனால் அது வேண்டாம்" என்றார் காளிதாசர், இவர் இப்படிச் சொன்னவுடன் ராஜாவுக்கு கோபம் வந்துவிட்டது, ராஜா பேச்சை மதிக்கவில்லை யென்றால்சும்மாவா? உடனே காளிதாசரைத் தேசப் பிரஷ்டம் செய்து விட்டார். அதாவது நாடு கடத்தி விட்டார். ஏதோ அவசரத்தில் அப்படிச் செய்து விட்டாரே தவிர, ராஜாவுக்கு கொஞ்ச நாளில் மிகவும்வருத்தமாகப் போய் விட்டது. மிகவும் கவலைப்பட ஆரம்பித்தார்: "ஒரு நல்ல நண்பர் என்னை விட்டுப் போய் விட்டாரே" என்று சொல்லி மிகவும், வருத்தப்பட்டார்.

சரி! அவர் எங்கே இருந்தாலும் தேடிக் கண்டு பிடிக்க வேண்டும். என்றுமுடிவு செய்தார்: ஒரு குடுகுடுப்பைக்கா மாதிரி வேஷம் போட்டுக் கொண்டு அவரைத் தேடிப் புறப்பட்டு ஊர் ஊராக அலைந்து ஊருக்கு வந்து சேர்ந்தார். அங்கே ஒருகசாப்புக் கடை, அதற்கு முன்னால் ஒரு சந்நியாசி நின்று கொண்டிருந்தார். அவர் விளையாட்டாக "கறி என்ன விலை என்று அந்தக் கசாப்புக் கடைக்காரரிடம் விசாரித்துக் கொண்டிருந்தார்: அதைப் போஜராஜா பார்த்தார். அந்தச் சந்நியாசி வேறுயாருமில்லை, காளிதாசர் என்பதை அடையாளம் கண்டுபிடித்துக் கொண்டார்; ஆனாலும், காளிதாசருக்கு ராஜாவை அடையாளம் தெரியவில்லை; இவர்தான் குடுகுடுப்பைக்காரன் வேஷத்தில் இருக்கிறாரே; வேஷப் பொருத்தம் அப்படி!

ராஜா அவரைப்பார்த்து.: ஏன் சுவாமி! ;காவித்துணிகட்டிக் கொண்டு.: இப்படிக் கறி விலை என்னவென்று கேட்டுக் கொண்டு நிற்கிறீர்களே! இது நியாயமா? என்று கேட்டார். இதற்கு அவர் "நான் எப்போதும் மாமிஷம் சாப்பிடுகிறதில்லை! மது அருந்துகிற சமயங்களில் மட்டும் அதைச் சாப்பிடுவேன்" என்றார். இவர் அசந்து போய்விட்டார்: ஏன் இப்படி அசந்து போய் நிற்கிறீர்கள்! உங்கள் ஊரில் இவையெல்லாம் கிடையாதா? நீங்கள் எந்த ஊர்?" என்று கேட்டார் நான் தாரா நகரம் என்றார் ராஜா, உடனே, சந்நியாசிக் கோலத்திலிருந்த காளிதாசர்; "தாரா நகரமா? அங்கேயுள்ள போஜராஜா எனக்கு மிகவும் நெருக்கமான நண்பர் அவர் எப்படியிருக்கிறார்" என்று விசாரித்தார்,

"நேற்றுத்தான் அவர் செத்துப் போய்விட்டார்." என்றார் ராஜா: காளிதாசர் அதிர்ச்சியாகிவிட்டார். கண்களிலே கண்ணீர். உடனே தாரா நிராதாரா.. என்று ஆரம்பித்துச்சுலோகம் பாடினார். 'சரஸ்வதிக்குப்பற்றுக்கோடு இல்லாமல் போய் விட்டது! என்மாதிரிப் புலவர்கள் இனிமேல் கண்டிக்கப்படுவார்கள்! போஜராஜா நீ மோட்சலோகம் போய் விட்டாயே' என்கிற அர்த்தத்தில் காளிதாசர் இரங்கற்பா பாடினார். அவ்வளவு தான்! போஜராஜா பொத்தென்று கீழே விழுந்து செத்துப்போய் விட்டார். அதன் பின்னர் தான் காளிதாசருக்குவிஷயம் புரிந்தது. உடனே ('என் நண்பருக்கு உயிர்ப்பிச்சை கொடு' என்று சரஸ்வதியிடம் வேண்டிக் கொண்டார். உடனே சரஸ்வதிதேவி காட்சிகொடுத்தார்;

'அவரை உயிர்ப்பிக்கின்றேன்: ஆனால் முழு ஆயுளையும் தரமுடியாது! ஏழரை நாழிகைக்கு ஆயுள் தருகிறேன். அதன் பின்னர் மறு படியும் செத்து விடுவார்' என்றார் ஏழரை நாழிகையென்றால் மூன்று மணிநேரம் போஜராஜா பிழைத்தெழுந்தார் ஏழரை நாழிகை ஆயுள் என்று தெரிந்ததும் ஒருவினாடி கூட வீணாக்கக் கூடாது என்று முடிவு பண்ணிக் காளிதாசரைக் கையெடுத்துக் கும்பிட்டார். நானும் நீயும் சேர்ந்து ஒரு ராமாயணம் பாடலாம் என்றார். இரண்டு பேரும் மாறி மாறிப் பாடி ஏழரை நாழிகையில் ராமாயணம் முழுவதையும் பாடி முடித்தார்கள். அதற்குபோஜ சம்பு என்று பெயர்: போஜராஜா ஏழரை நாழிகையில் இறந்து போனார்; 'போஜ சம்பு' இறக்கவேயில்லை நிலைத்து விட்டது: அந்தக் காலத்தில் எழுதினவர்கள் செத்துப்போனாலும் அவர்கள் எழுதிவைத்தது சாகிறதில்லை;

இந்தக் காலத்தில் எழுத்துக்கு ஆயுள்குறைவு எழுதுகிறவர்களுக்கு அந்தப் பிரச்சினை இல்லை. நான் இந்தக் காலத்து எழுத்தாளரைப் பார்த்து 'போஜராஜனுக்கு வந்த நிலைமை உங்களுக்கு வந்தால் என்ன செய்வீர்களென்று கேட்டேன் அதாவது ஏழரை நாழிகை தான் இருக்கப்போகிறீர்கள் என்று சொன்னதும் அவர் ராமாயணம் எழுதினார்: நீங்கள் என்ன செய்வீர்கள் என்று கேட்டேன்: இதற்கு அவர் உயில் எழுதுவேன் என்றார்;

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# வாக்களிப்பில் ஹக்கீம் கலந்துகொள்ள மாட்டார்!

## பொ ஐ. ஐ. மு. நம்பிக்கை

(கொழும்பு)

நம்பிக்கையில்லாப் பிரேரணை வெற்றி பெறுவதற்குத் தேவைப்படும் எம்பிக்களின் தொகையினர் அரச தரப்பிலிருந்து வருவார்களாயின் முஸ்லிம் காங்கிரஸ் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்குமென்று ரவூப்ஹக்கீம் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவிடம் தெரிவித்துள்ளதாக அறியப்படுகிறது.

இதேவேளை முஸ்லிம் காங்கிரஸ் நம்பிக்கையில்லாப்பிரேரணைக்கு எதிராகவாக்களிக்கும், அல்லது, வாக்களிப்பில் கலந்து கொள்ளாதென பொ ஐ: முன்னணி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன; (ந)

## நவராத்திரி விரதத்தை

# சைவத்தமிழ்ப் பண்பாட்டை பேணும் வகையில் அனுஷ்டிக்குக!

## இந்துமாமன்றம் அழைப்பு

(யாழ்ப்பாணம்)

எதிர் வரும் 17ஆம் திகதி புதன்கிழமை நவராத்திரி விரதம் ஆரம்பமாகிறது. இந்துக்களால்உலகெங்கணும் வெகு விமரிசையாக அனுஷ்டிக்கப்பட்டு வருகின்ற நவராத்திரி நோன்பை நாம் எல்லோரும் சைவப்பாரம்பரியத்தையும், தமிழ்க் கலாசாரப் பண்பையும் பிரதிபலிக்கும் வகையில் ஆடைகளை அணிந்து அனுஷ்டித்துப்பயன் பெற வேண்டும்.

இந்து மாமன்றத்தின் சார்பில் அதன் பொதுச்செயலாளர் அ.சிறிக்குமரன் விடுத்துள்ள செய்திக்குறிப்பில்மேற்கண்ட அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அந்தக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

சைவப் பாரம்பரியத்தையும் தமிழ்க் கலாசாரத்தையும் பிரதிபலிக்கும் வகையில் நவராத்திரிவிரதத்தைஅனுஷ்டியுங்கள்.

வீரத்தையும், செல்வத்தையும், கல்வியையும் வழங்குகின்ற சக்தி ஞ்ஞனஎடுக்கப்படும் இவ்விழாவானதுமாணவர்கள் மத்தியில் ஒழுக்கத்தையும் ஆன்மீக உணர்வையும், பண்பாட்டுப் பாரம்பரியத்தையும் வளர்ப்பதற்கு உதவ வேண்டும்.

வளர்ந்து வரும் இளைய தலைமுறையினர் மத்தியில் மேற்படியான அறஒழுக்கப் பண்புகள் வளர்த்தெடுக்கப்பட வேண்டியது காலத்தின் கட்டாயமாகின்றது.

எனவேஇந்நோன்பைசிறப்புடன் நோற்று சகல செல்வங்களையும் பெற்று பயனடைய வேண்டுமென அனைவரையும் கேட்டுக் கொள்கின்றோம்.

கல்விக் கூடங்கள் இவ்விழாவிற்குமுதன்மையளித்துஇளம் சந்ததியினரின் ஒழுக்க சீலவாழ்வுக்கு உதவ வேண்டும் என்றுள்ளது. (உ)

## வீடுகள் அமைக்கும் பணி மும்முரம்

(துன்னாலை)

பலாலி.மயிலிட்டி ஆகிய இடங்களிலிருந்து இடம் பெயர்ந்துபருத்தித்துறைப்பிரதேச செயலர் பிரிவுகளில்தங்கியுள்ளது மக்களுக்கு அரை வீட்டுத்திட்டத்தின் கீழ் 200 வீடுகள்அமைக்கும்பணிஇடம் பெற்றுவருகின்றது. (செ-44)

## பேருந்து சேவை

(மந்திகை)

பருத்தித்துறையிலிருந்து அச்சுவேலி வரையான 757 ஆம் இலக்க பேருந்து சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது;

இப்பேருந்து அல்வாய், வதிரிச் சந்தி, உடுப்பிட்டி, தொண்டைமானாறு ஊடாக சேவையில் ஈடுபடவுள்ளது; (செ-23)

## உபசாரம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தால் கௌரவ இலக்கியக் கலாநிதிப்பட்டம் வழங்கப்பட்ட தமிழக அறிஞர் சேக்கிழார் அடிப்பொடி தில்லைஸ்தானம் நடராஜன் இராமச்சந்திரனுக்கு ,நியந்ரீ' அமைப்பினர் நேற்று முன் தினம் நல்லூர் சிவன் கோவிலில் வரவேற்பு உபசாரம் ஒன்றைநடத்தினர்;

,நியந்திரீ'யின் தலைவரும் யாழ் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவருமானபேராசிரியர்ப.கோபாலகிருஷ்ண ஐயர் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது. (உ-106)

## முத்தமிழ் விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசியகல்வியியற் கல்லூரிமுத்தமிழ்விழா நாளை வெள்ளிக்கிழமை காலை 9 00மணிக்கு தமிழ் மன்ற உபதலைவர் ந.திருவாசகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராகயாழ் பல்கலைக்கழக உயர்பட்ட படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் அ.சண்முகதாஸ் கலந்து கொள்ளவுள்ளார்; (உ-106)

## கிரிக்கெட் போட்டி முதல் சுற்று யாழில்

(கொழும்புத்துறை)

இலங்கைகிரிக்கெட்கட்டுப்பாட்டுச் சபைக் கிண்ணத்துக்கான மாவட்டங்களுக்கிடையிலான கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரில் வடக்கு-கிழக்கு மாவட்டங்களுக்கான முதல் சுற்று ஆட்டங்கள் இம் மாதம் 18ஆம் திகதி யாழ். நகரில் நடைபெறவுள்ளதாக யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கச் செயலாளர் செ.விமலதாசன் தெரிவித்தார்;

யாழ்ப்பாணம், மட்டக்களபபு, வவுனியா, திருகோணமலை அணிகள் இப்போட்டியில் பங்கு கொள்ளவுள்ளன.

(உ-223)

## நிவாரண விநியோக சீர்கேடுகுறித்து மக்களிடம் நேரில் சென்று கேட்டறிவு

(அளவெட்டி)

நிவாரண விநியோகத்தில் இடம்பெறும் முறைகேடுகளைக் கண்டறியும் வகையில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இந்த வகையில், வலிகாமம் பகுதியில் வீடு வீடாகச் சென்று, சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் உணவு முத்திரை, பங்கீட்டு அட்டை என்பவற்றைப் பரிசீலனை செய்வதுடன், விநியோகிக்கப்படும நிவாரணப் பொருட்களின் தரம் பற்றியும் அறிந்து வருகின்றனர்.

(உ-237)

## ஆறுமுக நாவலர் குருபூசையை முன்னிட்டு மாணவரிடையே போட்டிகள்

(கொழும்புத்துறை)

சைவபரிபாலன சபைஸ்ரீல ஸ்ரீஆறுமுகநாவலர் குருபூசையை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கிடையே பேச்சு, கட்டுரைப் போட்டிகளை இம் மாதம்28ம் திகதி ஞாயிற்றுக்கிழமை வண்/நாவலர் மகா வித்தியாலயததில் நடத்தவுள்ளது.

கட்டுரை, பேச்சுப் போட்டிகளில்பங்குபற்ற விரும்புவோர் இம்மாதம் 15ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்ற வருடம் மேற்படி பிரிவுகளில் பங்கு பற்றி பரிசு பெற்றோர் இம்முறை அப்பிரிவில் பங்கு பற்ற முடியாதெனவும் போட்டிகளில் வெற்றி பெறுவோருக்கு தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்களும், சான்றிதழும் குருபூசை தினத்தில் வழங்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-223)

## கடவுச்சீட்டில் மோசடி நீர்கொழும்புச் சிறையில் 400பேர் தடுத்து வைப்பு

(கொழும்பு)

கடவுச்சீட்டு மற்றும் விசா என்பவற்றில் காணப்பட்ட மோசடிகள் காரணமாக400 பேர்நீர்கொழும்பு சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளதாக விமானசேவைகள் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

பிணைத்திருத்தச் சட்ட மூலம் தொடர்பாக நேற்றையதினம் நாடாளுமன்றத்தில உரையாற்றும் போதே அவர்இதனைத் தெரிவித்தார் அவர்மேலும் உரையாற்றுகையில், மேறபடி சிறைச்சாலையில்தடுத் துவைக்கப்பட்டவர்களில் சுமார் 200பேர் வரையானவர்கள் தமிழர்கள் என்றும் ஏனையவர்கள் சிங்களவர்களும் ,முஸ்லிம்களும் என்றும்தெரிவித்தார்; (ந-5)

## சிந்தனைக்கு விருந்து

### அவரின் ஆழ்ந்த துயர்

பேருடனே காசு பெருஞ்சாதி யின்மிடுக்குக்
கூருடைய வாள்போற் கொடுமபேச்சு வேருடனே
வீழ்ந்தனவே பேரிளம்பெண் ணான மகளுக்காய்
ஆழ்ந்ததுய ரானார் அவர்.

- பழையவன்.

# புனிதப்போரில் பங்கேற்க அனைத்து முஸ்லிம்களுக்கும் லேடன் அழைப்பு

(டுபாய்)

பலஸ்தீனர்கள் தமது நாட்டில் அமைதியாக வாழும் நிலைமை ஏற்படும்வரை அமெரிக்கர்களுக்கு அமைதி கிட்டப் போவதில்லை.

ஒஸாமா பின்லேடனால் டுபாய் தொலைக்காட்சி நிலையம் ஒன்றுக்கு அனுப்பி வைக்கப்பட்ட ஒளி நாடாவில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்படி ஒளிப்பதிவு நாடாவின் மூலம் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;

சகல திசைகளில் இருந்தும் அமெரிக்கா பெரும் அச்சுறுத்தலுடன் வாழ்ந்துவருகிறது; எமது முஸ்லிம் நாடுகள் ஏறத்தாழ 80 வருடங்கள் அனுபவித்த துன்பத்தை அமெரிக்கா இப்போது அனுபவித்து வருகிறது.

உலக தரிசனம்

ஏற்கெனவே முஸ்லீம் குழுவொன்றை இறைவன் ஆசீர்வதித்துள்ளார். அக் குழு மூலமே அமெரிக்கா தற்போது நெருக்குதல்களை அனுபவித்து வருகின்றது;

பயங்கரவாதத்திற்கெதிரான தாக்குதல் என்ற பெயரில் உலக நாடுகளில் உள்ள முஸ்லிம்களை அமெரிக்கா அழித்து வருகின்றது என்றும் முஸ்லிம் தலைவர்கள் சிலர் பெரும் நம்பிக்கைத் துரோகிகள் எனவும் குறிப்பிட்டுள்ள லேடன் அவர்கள் விரைவில் தண்டனைகளை அனுபவிக்க வேண்டும். இதற்காக சம்பந்தப்பட்ட துரோகிகளை தயாராக இருக்கும்படியும் எச்சரித்துள்ளார்.

அத்துடன் அமெரிக்காவுக்கு எதிரான புனிதப்போரில் பங்கு பெற அனைத்து முஸ்லிம்களும் விரைவில் ஒன்று கூடவேண்டும் என்றும் கேட்டுள்ளார்; (உ-7)

## வெள்ளப் பெருக்கு

(பரிஸ்)

பிரான்ஸின் தென்பகுதியில் ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்கு காரணமாக ஆயிரக்கணக்கானோர் தமது வீடுகளை விட்டு வெளியேறியுள்ளனர்;

நூற்றுக்கணக்கானவீடுகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன;

இதேவேளை மழை காரணமாக சில நாட்களாக மின்சாரம் தடைப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது; (உ-7)

## 5 நாடுகளுக்கு உறுப்புரிமை

(நியூயோர்க்)

ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையின் 15 உறுப்பு நாடுகளுடன் மேலும் ஐந்து நாடுகள் புதிதாகத்தெரிவு செய்யப்பட்டுள்ளன.

சிரியா, கமரூன், கினி, பல்கேரியா, மெக்சிக்கோ என்பனவே புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட நாடுகளாகும்;

இந் நாடுகள் 2003 ஆம் ஆண்டு ஜனவரி வரை பாதுகாப்புச் சபை உறுப்பினராக பதவி வகிக்க முடியும்; (உ-2)

## இந்திய விமானங்கள் பாக். வழி மாற்றம்

(புதுடில்லி)

இந்தியாவிலிருந்து மேற்குலக நாடுகளுக்குச் செல்லும் விமானங்கள் பாகிஸ்தான் வான் பரப்பூடாகப் பறப்பதைத் தவிர்த்துக்கொண்டன.

அமெரிக்க போர் விமானங்கள் பாகிஸ்தானூடாகச் சென்று ஆப்கானிஸ்தானை தாக்குவதால் இந்தியப் பயணிகளுக்கு பாதிப்பு ஏற்படலமென்ற] காரணத்தினாலேயே தான் மாற்று வழிகளால் இந்திய விமானங்கள் செல்கின்றன என்று கூறப்படுகிறது; (எ.து)

## தலிபானின் பாதை துண்டிப்பு வ.கூட்டணி அறிவிப்பு

(காபூல்)

தலிபானின் 40 தளபதிகளுடன் 1200 படையினர் வடக்குக் கூட்டணியுடன் சேர்ந்து கொண்டனர்.

இச் செய்தியை வெளியிட்ட வடக்குக் கூட்டணி தலிபானின் பிரதான தொடர்புப் பாதையைத் தாம் தடை செய்துவிட்டதாகவும் அத்துடன் விநியோகத்தை துண்டித்துவிட்டதாகவும் அறிவித்துள்ளது.

அமெரிக்காவின் வான் தாக்குதலைப் பயன்படுத்திக் கொண்டு தலிபான் நகரை நோக்கி 11 கிலோ மீற்றர் தனது தரைவழித்தாக்குதலை முன்னெடுத்துச் சென்றுள்ளதாகவும் பக்கிஸ் கோர் போன்ற நகரங்களைத் தாக்கிக் கொண்டிருப்பதாகவும் மேலும்தெரிவித்துள்ளது; (எ-து)

## புதிய தலைவர் நியமனம்

(மந்திகை)

வடமராட்சி தெற்குமேற்கு பிரதேச சபையின் ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் புதிய தலைவராக தர்மராசா ஜெயராசாபதவியைப்பொறுப்பேற்றுள்ளார்;

முன்னர்தலைவராகஇருந்த வ.நடராசா விலகியதை அடுத்து ஏற்பட்ட வெற்றிடத்திற்கு இவர் நியமனம் பெற்றுள்ளார்; (செ-23)

## ஆப்கான் மக்களுக்கு நிவாரணம் வழங்குவது முறையற்ற செயல்

(காபூல்)

ஆப்கான் மீது அமெரிக்க விமானங்கள் குண்டு மழை பொழிவதோடு ஆப்கானியருக்கு நிவாரணங்களை சரக்குக் கப்பல் மூலம் விநியோகிப்பது ஒரு முறையற்ற செயல் என்று கூறப்படும் செய்தியை அமெரிக்க பாதுகாப்புத் துறை அமைச்சர் றொனால்ட் ட்றன்ஸ்வெல்ட் ஏற்றுக் கொண்டுள்ளார்;

அமெரிக்கத் தாக்குதலானது தலிபான்களுக்கும், தமது நாட்டில் வெளிநாட்டுப்பயங்கரவாதிகளுக்கு இடமளித்தவர்களுக்கும எதிராக நடத்தப்படும். தாக்குதலாகும் எனவே,

இவ்வாறான தாக்குதல் இடம் பெறும்போது ஆப்கானியர்களுக்கு உணவுவழங்குவது ஆப்கான மக்கள் மீதான தாக்குதலே என்று சர்வதேசம் கணிப்பதற்கு இடமளிக்கும் என்று றொனால்ட் டிறன்ஸ் தெரிவித்துள்ளார்; (உ-7)

## அமெ. தாக்குதல் விரைவில் முடிவுறும்

(லண்டன்)

ஆப்கான் மீதான தாக்குதலின் முதல் கட்டம் ஒருசில நாட்களிலே முடிந்து விடும் என பிரிட்டன் பாதுகாப்புத் துறை அமைச்சர் 'ஜக்பூன்' தெரிவித்துள்ளார்;

அமெரிக்கா ஞாயிறு இரவு ஆப்கான் மீது நடத்திய தாக்குதலில் பிரிட்டிஷ் நீர்மூழ்கி கப்பல்களும் பங்கு பற்றிய போதிலும் இரண்டாம் நாள் தாக்குதலில் பிரிட்டிஷ் படையினர் பங்குபெறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது; (உ-2)

## பாதிக்கப்பட்ட யாழ்.மக்களுக்கு நிவாரணம் உலக வங்கி நடவடிக்கை

(கொழும்பு)

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள யாழ்.மாவட்ட மக்களுக்கு நிவாரணம் அளிக்கக் கூடிய வேலைத் திட்டங்களை ஏற்படுத்து வதற்கான நிதியுதவியினை வழங்க உலக வங்கி நடவடிக்கைகளை எடுத்துள்ளது என்று உலக வங்கியின் வதிவிடப் பிரதிநிதி மரியானாரொட றேரவா தெரிவித்துள்ளார்;

கல்வி மற்றும் சுகாதார வசதிகளுக்காக 150 மில்லியன் டொலர்களை உலக வங்கி இப்பகுதிக்கு வழங்கியுள்ளது என்று மேலும் தெரிவித்தஅவர், ஒரு புற்றுநோய் வைத்தியசாலையையும் நிறுவுவதற்கு ஆயத்தமாக உள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார்;

யாழ். மாவட்டத்திற்கு அண்மையில் தான் வந்தபோது மக்களின் உடல் நலம் பேணல் வசதிகள் மிகவும் குறைந்த நிலையில் இருப்பதை அவதானித்ததாகவும் மேலும் தெரிவித்த அவர், வறுமை ஒழிப்பு நடவடிக்கைகளுக்கு 350 மில்லியன் டொலர்களை உலக வங்கி வழங்கவுள்ளதாகவும், இம் மாதம் உலக வங்கித் தூதுக்குழு இங்கு வரவுள்ளதாகவும் கூறியுள்ளார்; (எ)

## முதியோர் மட்டத்தில் விழிப்புக் கருத்தரங்கு

(நவாலி)

நெடுந்தீவு பிரதேசசெயலர் பிரிவில், சனசமூக நிலையங்கள் தோறும் முதியவர்களுக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் சமூக சேவை அதிகாரி வி;கே; முருகையாவினால் நடத்தப்பட்டு வருகின்றன.

முதியோர்கல்வி, உளவளத் துணை ஆகியவற்றில் விழிப்புணர்ச்சி ஏற்படுத்தி முதியோர்களிடையே ஒரு சமுதாய மாற்றத்தை ஏற்படுத்தும் நோக்கில் சிறந்த முறையில் மேற்படி விழிப்புணர்வுக் கருத்தரங்கு நடத்தப்பட்டு வருகின்றது;

ஒவ்வொரு சனசமூக நிலையத்தில் இருந்தும் 25 முதியோர்கள் இதில் கலந்து கொண்டு பயன்பெறுகின்றனர். (உ-228)

## அமெரிக்கா மீதான தாக்குதல்கள் தொடரும் அல்குவாடா அறிவிப்பு

(காபூல்)

முஸ்லிம்களின் நிலப்பரப்பில்இருந்து அமெரிக்கா வெளியேறுமவரை அமெரிக்க விமானங்கள் கடத்தப்பட்டு அமெரிக்கா மீது தாக்குதல் நடவடிக்கை தொடரும் என்று அல்குவாடா அமைப்பு தெரிவித்துள்ளது;

அமெரிக்கா மீது இடம் பெற்ற தாக்குதலைத் தொடர்ந்து அமெரிக்கா ஆப்கான் மீது நடத்திவரும் தாக்குதல் குறித்து கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த அல்குவாடா அமைப்பின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்; (உ-7)

## ஆப்கான் முன்னாள் மன்னர் பாக். இற்கு எச்சரிக்கை

(ரோம்)

ஆப்கானிஸ்தானில் உள்நாட்டு வெளி நாட்டு நெருக்கடிகளை தாங்க முடியாமல் தலிபான் அரசு கவிழுமானால் மாற்று அரசை ஏற்படுத்த பாகிஸ்தான் அரசுமுயற்சிக்கக் கூடாது என்று ஆப்கானின் முன்னாள் மன்னர் எச்சரித்துள்ளார்;

இச் செய்தியை றோமிலுள்ள அவரது உதவியாளர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் ஆப்கானிஸ்தானின் எதிர் காலம் பற்றி ஆலோசிப்பதற்காக குழுவொன்றை மன்னர் ஜயிக்கான் பாகிஸ்தானுக்கு அனுப்பி வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது; (எ-து)

யாழ்ப்பாண மாநகரசபை கேள்வி அறிவித்தல்

[3ம்பக்கத் தொடர்ச்சி]

| இறைச்சிக்கடைகள் | | இல. மீளளிக்கக் கூடியகேள்விப் பிணைப்பணம் | நிர்ணயிக்கப் பட்ட ஆகக் குறைந்தகேள்வித் தொகை (ஜி.எஸ்.ரி.நீங்கலாக) | ஜி.எஸ்.ரி நீங்கலாக மாத வாடகை |
|---|---|---|---|---|
| 26. நாவாந்துறைமாட்டிறைச்சிக் கடை | 04 | 2500.00 | 6100.00 | 200/ |
| 27. „ „ | 05 | 2500.00 | 8100.00 | 200/- |
| 28. „ „ | 06 | 2500.00 | 5300.00 | 200/- |
| 29. „ „ | 07 | 2500.00 | 9700.00 | 200/- |
| 30. „ ஆட்டிறைச்சிக்கடை | 08 | 2500.00 | 3700.00 | 200/- |
| 31. „ மாட்டிறைச்சிகடை | 09 | 1500.00 | 5000.00 | 200/- |
| 32. „ „ | 10 | 1500.00 | 5000.00 | 200/- |
| 33. „ கருவாட்டுக்கடை | 11 | 1000.00 | 3000.00 | 200/- |
| 34. „ „ | 12 | 1000.00 | 3000.00 | 200/- |

முக்கிய குறிப்பு :-

1. தற்போது குத்தகை / வாடகை நிலுவைப்பணம் செலுத்த வேண்டியவர்களும் ஏற்கனவே தவறுநர் பட்டியலில் சேர்க்கப்பட்டவர்களும் கேள்விப் படிவம் பெற அருகதையற்றவர்களாவர்;
2. அத்துடன் கேள்விக்காரர்களால் சமர்ப்பிக்கப்படும்கேள்வித்தொகையுடன் மேலதிகமாக பண்டங்கள் சேவைகள்வரியான 12 5% ஐயும் சேர்த்து செலுத்துதல்வேண்டும் என்பதையும் அறியத்தருகின்றேன்;

இ. இராமலிங்கம்
மாநகரசபை ஆணையாளர்
யாழ்ப்பாணம்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம். 09-10-2001

(கி-2706)

இறல்ஈனும் எண்ணாதுவெஃ
கின் விறல் ஈனும்
வேண்டாமை என்னுஞ்
செருக்கு
குறள்

## வலம்புரி

### கோப்பாயில் முன்மாதிரி

யாழ்ப்பாணக் குடா நாட்டில திருடர்கள் தொல்லைதாங்கமுடியாத தொன்றாகி விட்டது. இது பற்றி பலதடவைகள் இப் பகுதியில் எழுதியிருந் தோம்.

பாதுகாப்புப் படையினர் வீதிகளிலும், சந்திகளிலும், குடில் கட்டி இருக்கும் போது திருட்டுக்கள் இடம் பெறுவது அதிசயமான உண்மை. இந்நிலையில் திருடர்களின் தொல்லையால் மக்கள் நிம்மதியாக உறங்குவதில்லை. திருட்டை ஒழிக்க வேண்டிய பாதுகாப்புப் படையினர் அது விடயத்தில் அக்கறை யற்று இருக்கும் போது, பொது மக்கள் ஒன்று திரண்டால் மட்டுமே திருடர்களுக்குப் பாடம் புகட்ட முடியும்.

இது விடயத்தில் கோப்பாய் இளைஞர்கள் முன்னுதாரணமாகச் செயற் பட்டுள்ளனர். கடந்த வாரம் கோப்பாய்ப் பகுதியில் திருட்டில் ஈடுபட்டிருந்த கோஷ்டி யொன்றை கோப்பாய் இளைஞர்கள் மடக்கிப்பிடித்து சாதனை படைத்துள்ளனர்,

கோப்பாய்ப் பகுதியில் தொடர்ச்சியாக நடந்து வந்த திருட்டைப் பொறுக்க முடியாத நிலையில் சுமார் இருநூற்றைம்பதுக்கும் மேற்பட்ட இளைஞர்கள் ஒன்று திரண்டு காவல் காத்திருந்து, திருடர் கோஷ்டியினை மடக்கிப் பிடித்துள்ளனர்.

இத் திருட்டுக் கோஷ்டியில் முதியவர் முதல் சிறுவர்கள் வரை அங்கம் பெற்றிருப்பதும், சில திருடர்கள்ஊரடங்கு வேளையில், நடமாடக் கூடிய 'பாஸ்' வைத்திருந்தமையும் வெளிப்பட்ட உண்மைகளாகும்.

ஊரடங்கு வேளையில் நடமாடுவதற்குரிய 'பாஸ்' திருடர்களிடம் இருந்திருக்குமாயின் அதன் உண்மை நிலைபற்றி பூரண விசாரணை நடாத்த வேண்டிய பெரும் பொறுப்பு யாழ். பொலிஸ் அத்தியட்சகருக்கு உண்டு.

அதேவேளை திருடர்களைப் பாதுகாப்புப் பிரிவினர் கட்டுப்படுத்துவார்களென்று பகற்கனவு காணாமல் ஒவ்வொரு பிரதேசத்திலும் உள்ள இளைஞர்கள் கோப்பாய் இளைஞர்களைப் போல் ஒன்று சேர்ந்து திருட்டைஒழிக்க முன்வரவேண்டும்.

திருட்டுக்கெதிராக-கசிப்புக் கெதிராக ஊர் ஒன்று திரண்டால், ஒரு கணத்தில் அவற்றை அழித்தொழிக்க முடியும். இது விடயத்தில் இளைஞர்களின் முன் வருகை அவசியம்.

# தேசிய மட்டத்தில் ஆரம்ப நிலை மாணவரின்

# கணித பாட அடைவில் ஏற்றத் தாழ்வுகள்

**தம்பியப்பா காங்கேசபிள்ளை**
M. Phil (Edu) B. Sc., P. G. Dip-inEdu, SLEAS
முதுநிலை விரிவுரையாளர் (கணிதம்)
பலாலி ஆசிரியர் கலாசாலை

மூன்றாம் உலகின் அபிவிருத்தி முயற்சிகள் அபிவிருத்திப் பிரச்சினைகளின் ஓரத்தை மட்டும் தொட்டுக் கொண்டிருப்பது மாத்திரமன்றி, அவற்றின் வழிந்தோடும் தாக்கங்கள் இன்னும் கிராமியப் பகுதிகளைச் சென்றடையவில்லை. இதன் காரணமாகப் பெறக்கூடிய வளங்களும், சேவைகளும் கிராமப்புற இல்லாதவர்களுக்கு எதிராக முனைவுபடுத்தப்பட்டும் சாய்ந்தும் உள்ளன. அபிவிருத்திக்கெதிரான முக்கிய தடைகளுள் ஒன்று கிராமிய மக்களின் உளளார்ந்த ஆற்றல்களின் உணர்வின்மையாகும். இவ்வுணர்வை உருவாக்குவது இந்நாடுகளை அபிவிருத்தி செய்வதற்கான ஓர் அணுகுமுறையாகும். இதற்குப் பொதுவாகக் கல்வியும் குறிப்பாகஆரம்பக் கல்வியில் இம்மக்களிடையே உணர்வை உருவாக்குவதற்கான ஒரு சாதனமாகும்.

இலங்கை இப்பணிக்கு தனது கவனத்தை நீண்டகாலமாகச் செலுத்தி வந்தாலும், கல்வியைச் சனநாயகப் படுத்தலில் இது காலம் வரை அளவு சார் விரிவாக்கத்திற்கே வழிப் படுத்தப்பட்டதேயன்றி பண்பு சார் அம்சங்களில் உள்ள குறைபாடுகள் இன்னும் குறைக்கப்படவில்லை,

ஆரம்பக் கல்வி ஒரு நாட்டின் அபிவிருத்திச் செயல் வழியின் மிக முக்கியமான பகுதியாகும். ஆரம்பக் கல்வியே சமூகத்தின்பெரும்பான்மையினரை அவர்களின் அடிப்படைத்தேவைகளை உயர்த்துவதற்கு உதவுகின்றது. சுகாதாரப் பழக்க, வழக்கங்கள், குடியியல் உணர்வு, விவசாயத் திறன்கள், விஞ்ஞான மாற்றங்கள் போன்றவற்றை மக்களின் செயற்பாடுடைய எழுத்தறிவினால் மட்டுமே அபிவிருத்தி செய்துகொள்ள முடியும்;

### அடிப்படைக் காரணிகள் செயற்பாட்டு எழுத்தறிவு

மனிதனின் அபிவிருத்தி கற்றலிலிருந்து வெளிப்படுகின்றது. மனிதக் கற்றல் முறையாக அபிவிருத்தி செய்யப் படாவிடில், மனிதவளம் விரயமான வளமாகிவிடும். அறியாமை மனிதரை ஓரங்கட்டிவிடும். நம்நாடு உடபட மூன்றாம் உலகில் ''எழுத்தறிவுள்ள, எழுத்தறிவற்றவர்கள்'' என்னும் தமது நாளாந்த செயற்பாடுகளுக்குப் பிரயோசனமற்ற கல்வியைப் பெற்ற விரயமான தலைமுறையினரே பொதுவாகக் காணப்படுகின்றனர். இது ஆரம்பக் கல்வியின் தோல்வியில் உருவாகியது; இவர்கள் ''நவீன முடிவெடுக்கும் முறையில்'' நிறைந்திருக்கும் எழுதப்பட்ட சாதனங்களைப் பயன்படுத்துவதற்கான வாசிப்புத்திறன்களையோ, எழுத்துத்திறன்களையோ பெற்றிருக்கவில்லை. இது வளர்முக நாடுகளில் பொதுவாகக் காணப்படும் மிகப் பெரிய குறைபாடாகும். உண்மையில் பாடசாலையை இடையில் விட்டுச் செல்லும் செயற்பாட்டு எழுத்தறிவின்மையும், எழுத்தறிவின்மையுடன்தொடர்புடைய மிகப் பெரிய பிரச்சினைகளாகும் செயற்பாட்டு எழுத்தறிவின்மையானது காலம், முயற்சி, பணம் என்பவற்றின் விரயமாகும். இவ்வகையான ''எழுத்தறிவுள்ள எழுத்தறிவின்மையை'' இல்லாதொழிப்பதற்காக எவ்வித தீவர முயற்சியும் அனேகமாக வளர்முக நாடுகளில் எடுக்கப்படவில்லை. உண்மையில் எழுத்தறிவு என்பது உணர்வாற்றலின் அபிவிருத்திக்கு வழிவகுப்பதாகவும், சமூகத்தில பயனுடையதாகவும் ஆக்கபூர்வமாகவும் பங்குபற்றுவதற்கான தகுதியை அதிகரிப்பதாகவும் இருக்க வேண்டும்.

ஆரம்பக் கல்வியின் இலக்காகக் கொண்டிருக்கும் செயற்பாட்டு எழுத்தறிவானது மொழி, கணிதம் ஆகியவற்றின் பண்புசார்மேம்பட்டிலிருந்து செயற்பட வேண்டும். இது வளர்ந்தோரை உற்பத்திமிக்கவர்களாக ஆக்குவதுடன் எழுத்தறிவை அபிவிருத்தி உள்ளீடுகளில் ஒன்றாகவும் ஆக்கும்.

தொடர்பாடல், சமூக அரசியல் நடவடிக்கைகளில் பங்குபற்றல், பொருளாதார அபிவிருத்தி என்பன செயற்பாட்டு எழுத்தறிவின் பேறுகளாகும். எனவே ஆரம்பக் கல்வி அபிவிருத்தியின் முதுகெலும்பாகும். ஆராய்வூக்கமானசிந்தனை செயல்மிகக, சமூக, பொருளாதார நபராக தொழிற்படுவதற்குரிய ஆர்வம் என்பனவே இடைநிலை, உயர்நிலைக் கல்விக்கான ஆரம்பக் கட்டம் என்பதை விட ஆரம்பக்கல்வி வேலைத்திட்டத்தின் இலக்காக அமையும்,

எழுத்தறிவுக் குறைபாடு வறுமையை நிலைத்திருக்கச் செய்யும் ஒரு தனிப்படுத்தலாகும். திறன் பெற்ற தொழில் சார் மனித வலுவின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு இடைநிலை, உயர்நிலைக் கல்வியை நாட்டின் சனத்தொகையில் ஒரு பகுதியினர் பெறுவது அத்தியாவசியமாகும். ஆனால் மிகக் குறைந்த செலவினம் கொண்ட ஆரம்பக்கல்வியில் செலுத்தப்படும் முதலீடுகள் கல்விக்கு உயர்ந்த நன்மையை அளிக்கின்றது. மனித வளங்களை அபிவிருத்தி செய்யும் சக்தி வாய்ந்த நிறுவகப்படுத்தப்பட்ட பொறிமுறையை கல்வி முறைமை அமைக்கின்றது. இதனால் தான் இலங்கையுட்பட சகல மூன்றாம் உலக நாடுகளும் கூடிய விரைவில் சர்வசன ஆரம்பக்கல்வியை அடைவதற்காக தம்மை அர்ப்பணித்துள்ளன.

### வருமானப் பரம்பல்

ஒரு நாட்டின் கல்வி முறையின் மீது இயற்கையும், அபிவிருத்தி முறையின் அமைப்பும் பெருஞ் செல்வாக்குச் செலுத்துகின்றன. முறைசார் கல்வியானது தனிநபர்களின் விழுமியங்கள், மனப்பாங்குகள் ஆர்வங்கள் ஆகியவற்றில் பெருந்தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. இம்முறைசார் கல்விக்காக பல தசாப்தங்களை செலவிட்டும், பல கோடி டொலர்களைச் செலவிட்டும், செலவிடப்பட்ட பணத்திற்கு ஒப்பீடாக இலங்கையுட்பட வளர்முக நாடுகளில் சராசரிப் பிரஜையின் நிலை மேம்படவில்லை. கல்வி இந்நாடுகளில் அரசாங்க மீள் செலவுகளில் பெரும் பங்கை உறிஞ்சுவதோடு பெரும்பாலான வளர்ந்தோரினதும், பிள்ளைகளினதும் காலத்தையும் செயற்பாடுகளையும் எடுக்கின்றது. எனவே மக்களின் பொருளாதார தேவைகளுக்கும், ஆர்வத்திற்கும் பொருந்தக்கூடிய கல்வி முறைமைவழங்கப்படவில்லை எனலாம்;

கிராமிய ஆரம்பப் பாடசாலைகளிலேயே தேசிய அபிவிருத்தி தொடர்பாக மிகவும் கூடிய குறை சீராக்கம்காணப் படுகின்றது; இலங்கையுட்பட மூன்றாம் உலக நாடுகளில் உள்ள கல்வி முறைமை சிலருக்கு வருமான சமனிலிகளைக் குறைப்பதற்குப் பதிலாக அதிகரிப்பதற்குத் தொழிற்படுகின்றது. சில காரணிகளினால் வறியோருக்கு உயர் கல்விக்கான வாய்ப்புக்கள் மறுக்கப்படுவதோடு, உண்மையில் கல்வி முறையே மூன்றாம் உலக நாடுகளில் கல்வியில் சமனிலியை உருவாக்கியுள்ளது வறியவர்களே கல்வி முறையை விட்டு முதலில் வெளியேறுகின்றனர். அதாவது அவர்கள் வாழ்வதற்காக உழைக்க வேண்டியிருப்பதுடன் ஒரு நிலையான எளிய தொழிலொன்றைப் பெற்றுக் கொள்வதற்குரிய கல்வியை வழங்குவதற்கு வறியவர்களுக்கு முடியாதிருப்பதோடு, ஆரம்பக் கல்வியைக் கூட பெறும் நம்பிக்கையும், மறைந்து விடுகின்றது. ஆரம்பக்கல்வி இலவசமாக இருந்த போதிலும், பிள்ளை பாடசாலைக்குச் செல்வது குடும்பத்திற்கு ஓர் இழப்பாக அமைகின்றது. ஏனெனில் உண்மையில் ஆரம்பக்கல்வியின் எதிர் பார்த்த பயன்கள் வறிய மாணவருக்கு மிகக் குறைவாகும். இதனால் அவர்கள் பாடசாலையை விரைவில் இடையில் விட்டுச் சென்றனர். இவ்வாறு இலவசக்கல்வி, சர்வசன ஆரம்பக் கல்வி என்பன இலங்கையிலும் இருந்த போதிலும் கிராமியப் பிள்ளைகள், உயர் கல்விக்குச் செல்வது மிகக் குறைவாகும். எனவே மிகக் கூடிய சமனில் வருமானப் பரம்பல் இடை, உயர்நிலை கல்வி முறைமைகளில் சமனிலியை அதிகரிப்பதற்கும், வறுமையை நிலைப் படுத்துவதற்கும் தொழிற்படுகின்றது எனலாம்.

தொடரும்

## சாயி அருளமுதம்



நான் சொல்வதைக் கேளுங்கள். நீங்கள் துயிலெழும் பொழுது இறைவனால் உங்களுக்குப் பணிக்கப்பட்ட கதாபாத்திரத்தை நடிப்பதற்காக அரங்கத்தில் பிரவேசிப்பதாக உணருங்கள். அந்தப் பாத்திரத்தைநன்குநடித்து இறைவனுடைய மெச்சுதலைப் பெற வேண்டுமெனப் பிரார்த்தியுங்கள். இரவில்நீங்கள் தூங்குவதற்குச் செல்லும் போது, காட்சியின் பின் கதாபாத்திரத்திற்குரிய உடைகளுடன், இவைப்பாற்று அறைக்குள் செல்வதாக எண்ணிக் கொள்ளுங்கள். ஒருவேளை உங்கள் கதாபாத்திரத்தின் நடிப்பு முடிவுபெறாதபடியிருந்தால் உடைகளைஅகற்ற அனுமதிக்கப்படாமலிருக்கலாம். அல்லது மறு நாட் காலை மீண்டும் தோற்ற வேண்டியிருக்கலாம்; அதையிட்டுக் கவலைப்பட வேண்டாம். முற்று முழுதாக இறைவனுடைய பொறுப்பில் உங்களை விட்டுவிடுங்கள். அவர் அறிவார். நாடகத்தை எழுதியது அவரேயாதலால் அது எப்படி முடிவுறும் என்பதையும் எப்படித் தொடரும் என்பதையும் அவரே அறிவார்; நடித்து விட்டு ஓய்வுபெறுவதே உங்கள் பங்கு ஆகும்.

நன்றி
**நாளாந்த நற்சிந்தனை.**

### மாதாந்த உதவிப்பணம்

(கொழும்புத்துறை)

யாழ். தபாலகங்களில் ஒக்ரோபர் மாதத்திற்குரிய பொதுசன மாதாந்த உதவிப் பணம், புற்றுநோயாளர்களுக்கான பணம் என்பன வழங்கப்படுவதாக தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன, (செ-223)

### அடிக்கல் நாட்டல்

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை தெற்கு முதலி கோவிலடி பேச்சி அம்மன் ஆலய மண்டபத்திற்கான அடிக்கல் நாட்டுவிழா எதிர் வரும் 13ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

வலி-மேற்கு பிரதேச சபை தலைவர் ந. திரிலோகநாதன் அடிக்கல்லை நாட்டி வைக்கவுள்ளார்.

### மிதிவெடியில் சிக்கி காயம்

(யாழ்ப்பாணம்)

வீட்டு வளவு துப்பரவு செய்து கொண்டிருந்த சமயம் மிதி வெடியில் சிக்கி குடும்பஸ்தர் ஒருவர் வலது காலில் படுகாயமடைந்த நிலையில்யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றைய தினம் மு.ப 11.00 மணியளவில் வடக்குப் பகுதியில் இடம் பெற்ற இந்தச் சம்பவத்தில், சின்னவன் பூபாலசிங்கம் (வயது 47) என்பவரே படுகாயமடைந்துள்ளார், (உ-10)

# ஜனாதிபதியால் நாட்டுக்கு ஏற்பட்ட பாதிப்பைச் சுட்டிக் காட்டினேன்

## எஸ். பி. திஸநாயக்கா அறிக்கை

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகாகுமார துங்கா தனது சிந்தனையிலும் செயற்பாட்டிலும் மாற்றம் கொண்டு வருவது அவசியமென அவரிடம் நான் சுட்டிக் காட்டிய நாள் முதல் அவர் என்மீது வீண்பழி சுமத்தத் தொடங்கி விட்டார்.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் எஸ். பி. திஸநாயக்கா தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் பதவியிலிருந்து திஸநாயக்கா நீக்கப்பட்டதையடுத்து கடந்த செவ்வாய்க்கிழமை அவர் அறிக்கையொன்றை வெளியிட்டார். அவ்வறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பொதுஜன ஐக்கிய முன்னணி தலைமையின் பலவீனம் காரணமாக இந்நாட்டு மக்களின் அபிலாசைகளை நிறைவேற்ற முடியாமல் போனமைக்காக மன்னிப்புக் கோருகிறேன்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் பதவியில் இருந்து நீக்கப்பட்டதற்கான கடிதம் கிடைத்தது. அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்ட விபரங்களுக்கு நேர்எதிரான விடயங்களே ஊடகங்களுக்கு கூறப்பட்டுள்ளன:

எனக்கும் கட்சியின் முக்கியஸ்தர்கள் பலருக்கும் அழைப்பு விடுக்காது இரகசியமாக நடத்தப்பட்ட ஒரு மத்திய குழுக் கூட்டத்திலேயே என்னைப் பதவி நீக்கும்முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்கவின் சிந்தனையாலும் செயற்பாட்டாலும் இந்த நாட்டுக்கும் எமது கட்சிக்கும் கடுமையான பாதிப்பு ஏற்படுவதால், அவற்றை சரி செய்து கொள்ளுமாறு ஆறு மாதங்களுக்கு முன்னர் நான் சுட்டிக் காட்டினேன். அத்துடன் சகல கட்சிகளையும் ஒன்றிணைத்து தேசிய அரசாங்கம் ஒன்றை அமைக்க வேண்டிய தன் அவசியத்தையும் வலியுறுத்தினேன். இதனை பிரதமர் மற்றும் பேராசிரியர் ஜீ எல். பீரிஸ் ஆகியோருடனான சந்திப்பொன்றின் போதே ஜனாதிபதியிடம் முன்வைத்தேன்;

அன்று முதல் ஜனாதிபதி என்மீது பல்வேறுபட்ட சதிப்புரட்சி குற்றச் சாட்டுக்களை சுமத்த ஆரம்பித்தார்: அவரால் வழமையாக சுமத்தப்படும் ஊழல் மோசடிக்குற்றச் சாட்டுக்கள் என்மீதும் சுமத்தப்பட்டன என்று அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## அமைச்சர்

ளதாகக் குறிப்பிட்டுள்ளார்:

அரசாங்கத்துடன் இணைந்திருந்தபோது தமக்கும் தமது கட்சிக்கும் வழங்கிய ஆதரவுக்கு மறைந்த தமது பாட்டனாரின் இறுதிக் கிரிகைகளின் போது வழங்கிய அரச மரியாதைகளுக்கும் நன்றி தெரிவிப்பதாகவும் அவ் வறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளார்

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அமைச்சர் ஆறுமுகம்தொண்டமானின் இராஜினாமாக் கடிதத்தை ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்கா நேற்று ஏற்றுக்கொண்டார்

(ந-4)

## வீதி ஒழுங்கு

பகுதியைச் சேர்ந்தவரும், தற்போது உயரப்புலம் ஆனைக்கோட்டையில்வசித்து வருபவருமான ஸ்ரீஸ்கந்தராசா விமலேஸ்வரன (வயது 16) என்பவரே இவ்வாறு சூட்டுக்குப் பலியானவராவர்

நேற்றுக்காலை 8.29மணியளவில் சகா ஒருவருடன பணியில் ஈடுபட்டிருந்த வேளை இனம்தெரியாத இருவர் மேற்படி இளைஞரை நெருங்கி மூன்று தடவைகள் பிஸ்ரலினால் சுட்டதாகவும், காது மற்றும், நெஞ்சுப் பகுதியில் துப்பாக்கிச் சன்னங்கள் துளைத்த நிலையில் அந்தவிடத்திலேயே துடிதுடித்து மரணமடைந்ததாகவும் தெரியவந்துள்ளது.

சம்பவம் நடந்த இடத்திற்கு உடன் விரைந்த பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் அவ்விடத்தைச் சுற்றி தீவிர தேடுதல் நடத்திய போதிலும் சம்பவத்துடன் தொடர்புடைய எவரும் சிக்கவில்லை.

சடலம் காலை 9.30 மணியளவில் சம்பவம் நடந்த இடத்திலிருந்து பொலிஸாரினால் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப் பட்டது;

சம்பவம் இடம்பெற்று சிறிது நேரம் அவ்விடத்தில் பதற்றம் நிலவிய போதிலும் பின் நிலமை வழமைக்குத் திரும்பியது

இதேவேளை இச் சம்பவத்தையடுத்து வீதிப்போக்குவரத்துப் பாதுகாப்பு பிரிவினர் எவரும் நேற்றய தினம் சேவையில் ஈடுபட வில்லை. என்பது குறிப்பிடத் தக்கது

(உ.10

## நிராயுத

இது தொடர்பாக அவர் விடுத்தகண்டன அறிக்கையில் மேலும்தெரிவிக்கப்பட்டிருப்பதாவது நிராயுதபாணிகளாக தம்மை அடையாளம் காட்டி நாசகாரசெயல்களில் ஈடுபடும் கொலைகாரர்களின் கொலைகரம்மீண்டும்ஒருதடவை யாழ் நகரில்அரங்கேறியுள்ளதுமிகவும் வேதனைக்குரியதும் கண்டனத்துக்குரியதுமாகும்.

வீதிப் போக்கு வரத்துப்பிரிவில் பணிபுரிந்த இந்த அப்பாவி இளைஞனின் குரல் வளையை நசுக்கியதன் பயன் இக் கொலைகாரர்களிற்கு ஈட்டிய நன்மை என்ன? இப்படிப்பட்ட அப்பாவிகளின் கொலை எம் தேசத்தை மீட்பதற்கு வழிவகுத்து விடுமா? நிராயுதபாணிகளான எவரையும்எதிரிகளாக நோக்காமல் தொண்டு செய்து நின்ற இவ் இளைஞனின் கொலைச் செயல் அபபாவிகளான பொது மக்களை மீண்டும் குறிவைக்கும் ஓர்படியாக அரங்கேறியுள்ளது என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை;

எனவே மக்களாகிய அனைவரும் இந் நாசகார செயல்களில் ஈடுபடும் சூத்திரதாரிகளை இனியும் ஆதரிப்பதானால்இபபடிப்பட்ட அப்பாவி இளைஞர்களின் உயிர்கள் காரணமின்றி பறிக்கப்படும் என்பதில் ஐயமில்லை எனவே இனியும் இப்படியான அநியாயமான கொலைகளிற்கு முற்றுப் புள்ளிவைக்க அனைத்துத் தரப்பினரும் எதிர்த்துக் குரல் கொடுக்க முன்வர வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.கு

## வீதிப்போக்கு

ராஜா விமலேஸ்வரன் இனந்தெரியாத ஆயுதபாணிகளினால் சுட்டுக்கொல்லப்பட்டது அனைவரும் அறிந்ததே. இரத்த வெள்ளத்தில் துடிதுடிக்க கேட்பார் அற்ற நிலையில்,விமலேஸ்வரன் சுடப்பட்டார்.இவர் சுட்டதற்கு காரணம் என்ன? இவர் செய்த குற்றம் யாது?போக்குவரத்து பாதுகாப்பு பிரிவில் ஈடுபட்டது ஒரு குற்றமா? போக்குவரத்து பாதுகாப்பு உத்தியோகஸ்தர்கள் அனைவரும் தேச விரோதிகளா? நாம் யாரை காட்டிக் கொடுத்தோம்? எந்த தேச விரோத கும்பலுக்கு துணை போனோம்.

நாமும் இம் மண்ணில் பிறந்த தமிழர்கள்தானே எமக்கும் குடும்பங்கள் உண்டு நாம் பாடசாலை வாழ்க்கை முடித்துவிட்டு வேலையற்ற நிலையில் எமதுகுடும்பத்துக்கு பாரமாக இருந்த நாட்கள் தான் அதிகம்.எமது குடும்பத்தின் பாரம் குறைய எமது குடும்பத்தின் வறுமை நீங்க எமது குடும்பத்தின் பட்டினிச் சாவு மறைய எமது குடும்பம் அன்றாடம் இரண்டு வேளையாவது உணவு உண்ணவேண்டும் என்பதற்காகவே இவ் வேலை வாய்ப்பில் இணைந்தோம்.

இவ்வேலை வாய்ப்பால் எமது குடும்பத்துக்கு மட்டும் இன்றி வீதியில் அன்றாடம் போக்கு வரத்தில் ஈடுபடும் மக்களுக்கும் நன்மையளிக்க கூடியதாகவே இதுஅமைந்தது இன்று இப்பணியில் ஈடுபடும் காலத்தில் இருந்து போக்குவரத்து நெரிசல்கள், வீதிவிபத்துக்கள் போன்ற உயிர்சேதங்களிலிருந்து அதி கூடிய நன்மை செய்யும் செயற்பாடுகளிலேயே நாம் செயற்பட்டு வந்தோம். இது மாபெரும் தவறா? அல்லது இது ஒரு தேச விரோதமா? நாம் எவருக்கும் எதிராகவும் ஆயுதம் தூக்கவும் இல்லை?எவருக்கும் ஆதரவாகவும் பிரசாரம் செய்யவும் இல்லை;

இப்படியாக செயற்பட்டு வந்த எமக்கு மரணந்தானா பரிசு? நாம் இவ்வாறு செயற்படுவதை ஒரு தேச விரோதமாக கருதினால் செய்தி ஊடகங்கள் ஊடாகவே இதுபற்றிய விபரம் எமக்கு அறியத்தரவும்; அவ்வாறு அறியப்படுத்துவதன் மூலமாக எமது குடும்பம் வறுமையின் நெருக்குதலில் மாட்டிக் கொண்டாலும் நாம் பட்டினி சாவை எதிர்கொண்டாலும் ஒரு வேளை தானும் உணவு கிடைக்காமல் போனாலும் அது பற்றி எமக்கு அக்கறை இல்லை நாம் ஒரு தேச விரோதிகள்என்ற பெயருடன் மரணத்தைத் தழுவாதிருந்தால் போதும் ஆகவேஎம்மை தேச விரோதிகள் என நினைத்து எம் மீது மரண வேட்டுக்களை தீர்க்கும் நம்மவர்கள் இதற்கு பதில் கூறட்டும்.

> **யாழ்.கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி உயர்தர மாணவமன்ற ஒன்றுகூடல்**
>
> எமது கல்லூரி மாணவன் சாந்திராஜ் டிலோசன் விடுதலை தொடர்பான நடவடிக்கைகள் தாமதமடைந்துள்ளதால் எம்மால் 14.10.2001ஞாயிற்றுக் கிழமை ஏற்பாடுசெய்யப்பட்ட மாணவ ஒன்றுகூடல் நிகழ்வு பிற்போடப் பட்டுள்ளதை மனவருத்தத்துடன் அறியத்தருகின்றோம்;
>
> 10.10.2001 உயர்தரமாணவமன்றம்
>
> (3833)

# திஸநாயக்காவின் மகன் பொலிசாரால் கைது

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் எஸ். பி. திஸநாயக்காவின் மகன் நேற்றுக்காலைவெலிக்கடைப் பொலிசாரால் கைதுசெய்யப் பட்டார்:

பாராளுமன்ற பாதுகாப்பு பிரிவில் கடமையாற்றும் பொலிஸ் ஒருவர் மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்தவேளை இராஜகிரியவில் வைத்து அவரை திஸநாயக்காவின் மகன் காரால் மோதினார் என்றகுற்றசாட்டிலேயே கைது செய்யப் பட்டார்;

திஸநாயக்காவின் மகன் செலுத்தி வந்தகார் அரசாங்க வாகனமெனவும் தெரிவிக்கப் படுகிறது:

தற்போது வெலிக்கடைப் பொலிஸ் நிலையத்தில் திஸநாயக்காவின் மகன் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்;

எஸ். பி. திஸநாயக்காவை அரசியல் ரீதியில் பழிவாங்கும் நோக்கிலும்அவரைமிரட்டும் தொனியிலுமே மேற்படி சம்பவம் சோடிக்கப் பட்டதாக திஸநாயக்காவின் குடும்பப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை முன்னாள் அமைச்சர் எஸ். பி. திஸநாயக்காவைஸ்ரீலங்காசுதந்திரக் கட்சியின் செயலாளர் பதவியில் இருந்து நீக்கியமையும் அவர் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு எதிராக செயற்படுவதும் தெரிந்ததே. (இ)

## ஆட்சியை

நேற்று நள்ளிரவு தொலைபேசி மூலம் வலம்புரிக்குத் தெரிவித்துள்ளார்.

11வது பாராளுமன்றம் கலைக்கப்பட்டது தொடர்பாக அவருடன் தொடர்பு கொண்டு கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்;

இது தொடர்பாக ஜோசப் எம் பி மேலும் தெரிவித்திருப்பதாவது; ஜனநாயகத்துக்கு விரோதமான முறையில் செயல்படுபவர்களுக்கு பாராளுமன்றத்தை கலைப்பதைத் தவிர வேறு வழி ஒன்றும் இருந்திருக்க மாட்டாது என்றும் தெரிவித்துள்ளார் (வ)

## 11ஆவது

குமாரதுங்கா கூட்டியிருந்தார்.

இக் கூட்டத்தில் அரசின் சிரேஷ்ட முக்கிய அமைச்சர்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டார்கள். சுமார் இரண்டு மணி நேரத்துக்கும் அதிகமாக நடைபெற்ற இக் கூட்டத்தில் அரசாங்கம் எதிர்கொள்ளவுள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் சாதக, பாதக விளைவுகள் தொடர்பாக தீவிரமாக கலந்தாலோசிக்கப்பட்டது

இக் கலந்துரையாடலின் போது அமைச்சர்கள், எம்பிக்கள் பலரும் பாராளுமன்றம் கலைக்கப் படுவதையே ஆதரித்து இறுதி முடிவு செய்யும் அதிகாரத்தை ஜனாதிபதியிடம் வழங்கியிருந்தனர்,

இதனையடுத்து நேற்று நள்ளிரவு பாராளுமன்றம் கலைக்கப்பட்டுஇம்மாதம்20ம் திகதிக்கும் 27ம் திகதிக்கும் இடையில் பொதுத் தேர்தலுக்கான வேட்பாளர் நியமனப்பத்திரங்கள் தாக்கல் செய்யலாம் என்றும் டிசம்பர் மாதம் 5 ம் திகதி பொதுத்தேர்தல் நடைபெற்று 12 வது பாராளுமன்றம் 2002 ம் ஆண்டு தை மாதம் 1 ம் திகதி கூடுமெனவும் வர்த்தக மானிமூலம்அறிவித்தல் வெளியாகியுள்ளது

புதிய பொதுத்தேர்தலுக்கான ஜனாதிபதியின் அறிவிப்பினை அடுத்து நம்பிக்கையில்லாத்தீர்மானத்தின் முடிவு எப்படியிருக்கப் போகிறது என்ற பல்வேறு ஊகங்களுக்கும் அமைச்சர் பதவியை குறிவைத்து கட்சி விட்டு கட்சிதாவும் முயற்சிக்கும் முற்றுப்புள்ளிவைக்கும் வகையில் ஜனாதிபதியின் இந்தஅறிவிப்பு இருப்பதாக அரசியல் அவதானிகள் கருத்துவெளியிட்டுள்ளதுடன் 12 வதுபாராளுமன்றம் தொங்கு பாராளுமன்றமாகவே அமையக்கூடிய வாய்ப்புக்கள் இருப்பதாகவும் கருத்துவெளியிட்டுள்ளனர்

இதேவேளை பாராளுமன்றம் கலைக்கப்படுமென்று நேற்றையதினம் வலம்புரி செய்தி வெளியிட்டமையும் இங் குறிப்பிடத்தக்கது

(வ)

# கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

(வவுனியா)

திருகோணமலை அனுராதபுரம் வீதியில் அமைந்துள்ள வெல்வேரிக்குளம் விமானப் படை முகாம் மீது நடத்திய தாக்குதல் மூலம் விடுதலைப் புலிகள் கைப்பற்றிய ஆயுத தளபாடங்களின் விபரம் வருமாறு,

50 கலிபர் துப்பாக்கிகள் - 2

ஏ-கே-எல்-எம்-ஜி இயந்திர துப்பாக்கிகள் - 3

ரி-56 இரண்டு ரக துப்பாக்கிகள் - 2

ஐ-60 மி.மீ கொமாண்டோ மோட்டர் - 1

50 கலிபர் பரல் - 1

50 கலிபர் முக்காலி - 1

ஸ்ரெயினர் - 1

[இ]

## சேக்கிழார் அடிப்பொடி வலம்புரிக்கு விஜயம்

(யாழ்ப்பாணம்)

தமிழக அறிஞர் சேக்கிழார் அடிப்பொடி திலலைஸ்தானம் கலாநிதி நடராஜன் இராமச்சந்திரன அவர்கள் நேற்று மாலை வலம்புரிப் பத்திரிகைக் காரியாலயத்திற்கு விஜயம் செய்து ஆசியுரை வழங்கினார். (ந)

## விமானப்படை

ரவு 11 மணிமுதல் அதிகாலை 4 மணிவரை இடம் பெற்ற இத்தாக்குதலினால் விமானப் படையினர் 4பேர் ஸ்தலத்தில் கொல்லப்பட்டனர் ஏழு பேர் படுகாயங்களுடன் திருகோணமலை வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர். பத்துப்படையினர் காணாமல் போயுள்ளதாக திருமலைத் தகவலகள் தெரிவிக்கின்றன,

விடுதலைப் புலிகள் மேறபடி முகாமை இரணடுமணித்தியாலங்கள் வரை தமது பூரண கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்ததுடன் பெருமளவான ஆயுத தளபாடங்களையும் அளளிச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது,

விமானப்படையின் விமானங்கள் பதிலுக்கு தாக்குதல் நடத்தியுள்ளன. எனினும் புலிகளுக்கு ஏற்பட்ட சேத விபரம குறித்து தகவல்கள் ஏதும் வெளியாகவில்லை [இ]

## பகிஷ்கரிப்பு

மககளுக்கு வேண்டுகோள் விடுததுவ்ளனர்

இன்றைய பகிஷ்கரிப்புப் போராட்டத்துக்கு அரச தனியார் நிறுவனங்கள்,வர்த்தகநிறுவனங்கள் அனைத்தும் ஒத்துழைப்பு வழங்குமாறு வீதிப் போக்குவரத்து பாதுகாப்பு பிரிவினர் கேட்டுள்ளனர்

இதேவேளை மேற்படி பகிஷ்கரிப்பு போராட்டத்தை தாம் ஆதரிப்பதாகவும், அதற்கு சகல பாடசாலைகளும், வர்த்தக நிலையங்களும் மற்றும் அரச தனியார் நிறுவனங்களும் ஒத்துழைப்பு வழங்குமாறு ஈ-பி-டி-பி அமைப்பினர் கேட்டுள்ளனர்

(இ-104)

இப் பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 11-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.